

# செங்காந்தள் - நாவல்-1

முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் பா. ம. ஜெயகலா

புத்தகக்குறிப்பு

9 789391 115548



# செங்காந்தள்  -  நாவல் - 1

# Title Verso

**TITLE OF THE BOOK**: **Chenkaantal - Novel - 1**

**புத்தகத்தலைப்பு : செங்காந்தள் - நாவல் - 1**

**EDITORS : Dr D. Maheswari & Dr P. M. Jayakala**

**தொகுப்பாசிரியர் : முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் பா. ம. ஜெயகலா**

**FIRST EDITION** : 2021

**முதல் பதிப்பு** : 2021

**PAGES/பக்கங்கள்**: 116

**PRICE/விலை** : 300

**ISBN NUMBER** : 978-93-91115-54-8

**PUBLISHER** : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu, India.

**PRINTER** : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu, India.

**பதிப்புரிமை/Copyright © 2021 – முனைவர் த.மகேஸ்வரி /Dr D.Maheswari**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன் என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையை சூடியவன் முருகன் என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சார பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ் சமூகம் தமிழ்த்தேன் பருக; தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளை புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

# மதிப்புரை

நாவல் என்பது வாழ்க்கை நிகழ்வுகளோடு கற்பனைகலந்து உரைநடையில் எழுதப்படும் ஓர் இலக்கிய வடிவம். இதனை தமிழில் புதினம் என்று அழைப்பர். குறிப்பிட்ட இனம் சார்ந்த மக்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துரைப்பதில் நவீன இலக்கிய வகைமைகளுள் நாவல் இலக்கியமே முன் நிற்கிறது.

**இரும்பு குதிரைகள் நுவலும் பெண்ணியம்** என்னும் கட்டுரையானது பெண்களின் மனநிலையையும், அவர்கள் வாழும் சூழ்நிலையையும், பெண்தனக்கான தேடல்களில் ஈடுபடுவதையும், பெண்ணுக்கான தளம் எது என்பதையும், பெண்ணின் உரிமைகளையும், கடமைகளையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. பெண் தனக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கணவனுக்காகவும், குழந்தைகளுக்காகவும் வாழ்வதையும் கற்பு என்னும் ஒழுக்கத்தை ஆணும் பெண்ணும் சமமாகப் பின்பற்றும் போது தான் சமுதாயம் சமநிலையை நோக்கி பயணிக்க முடியும் என்பதையும் இக்கட்டுரைச் சுட்டுகின்றது.

பெண்களின் சிக்கல்களைப் பெண் தனது கண்ணோட்டத்தில் எடுத்துரைக்கும் போது தான் அதன்

உண்மை தன்மைப் புலப்படுவதையும், பெண்கள் மற்றவர்களை எதிர்பார்க்காமல் பிறருக்குகொடுக்கிற இடத்தில் இருக்க வேண்டும் என்பதையும், பெண்கள் தங்களை அடுத்த அடுத்ததளத்திற்கு நகர்த்தி செல்ல தங்கள் திறனை வளர்த்துக்கொள்வதையும் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

ஆண்களை எதிரியாக நினைக்காமல் குடும்ப அமைப்பை சிதைத்துவிடாமல் பெண் விடுதலைக்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆண்கள் குடும்ப பொறுப்பை ஏற்பதுபோல பெண்களும் முன்வந்து பொருளாதாரத்தை உயர்த்த பணிக்கு செல்லவேண்டும் என்பன போன்ற பெண்ணியக் கருத்துகளை முன்வைப்பதாக இவ்வாய்வு கட்டுரை அமைந்துள்ளது. பெண்ணியம் சார்ந்த செய்திகளை சிறப்பான கருத்துக்கள் மூலம் இக்கட்டுரைப் புலப்படுத்தியுள்ளது.

**பாடகர் வரலாறு கூறும் குறிஞ்சித்தேன் நாவல் - பண்பாட்டு மரபும் மாற்றமும்** என்னும் கட்டுரையானது நீலகிரியில் வாழும் மலைவாழ் மக்களான படகர் இனமக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கின்றது. இயற்கையோடு இயைந்து வாழநினைக்கும் மூத்த தலைமுறையினருக்கும் நவீன மாற்றங்களுடன் வாழநினைக்கும் இளைய தலை முறையினருக்கும் இடையேயான பண்பாட்டு மரபுகளையும்

மாற்றங்களையும் சித்தரிக்கிறது. காலங்காலமாக தங்களுடைய முன்னோர்களின் பண்பாட்டு மரபுகளையே பின்பற்றி வாழ்ந்த இச்சமூகம் உணவு, உடை, தொழில், சடங்குமுறைகள், நம்பிக்கை, மருத்துவம் என்பனவற்றில் பண்பாட்டு மாற்றங்களைஅடைந்துள்ளது.

மூத்ததலைமுறையினர் சைவஉணவு மட்டுமே உண்டுள்ளனர். அசைவ உணவினை உண்பவர்கள் இழிகுலத்தார் என்று அழைக்கப்பட்டுள்ளனர். மரபுவழி பட்ட சமூகத்தில் விவசாயப் பயிர் உற்பத்தியும், சாகுபடி முறைகளும் கைவிடப்பட்டு பணப்பயிரான தேயிலை, காப்பி விவசாயத்துக்கு மாறிச் சென்றதை இக்கட்டுரை அடையாளப்படுத்துகிறது.

குடும்பத்தில் உள்ள ஆண் மற்றும் பெண் இருவருமே உழைத்த நிலைமாறி சேம்பேறிதனத்தால் இருவரும் உழைக்காமல் கூலிக்கு ஆட்களை அமர்த்தும் நிலையினையும் இக்கட்டுரைவழி அறியமுடிகின்றது. தங்களுக்கு ஏற்டுபம் நோய்க்கு காரணம் குறும்பர்களின் செய்வினை என்று கருதி அவர்களுக்கு காணிக்கையாக தானியங்கள் மற்றும் அணா (ரூபாய்) கொடுத்து செய்வினையை அகற்றும்படி வேண்டியுள்ளார்கள். குறும்பர்களின் மந்திரத்தால் தான் நோயினைப் போக்கமுடியும் என்று நம்பிய காலம்மாறி

நோயைத் தீர்ப்பதற்கு எந்த மருத்துவமனை சிறந்தது என்று ஆராயும் அளவிற்கு பண்பாடு மாற்றம் அடைந்துள்ளது. இக்கட்டுரையானது படகர் இனமக்களின் வாழ்வியல் செய்திகளை கண்முன்னே கொண்டு வந்ததோடு நின்று விடாமல் காலத்திற்கு ஏற்பமக்கள் பண்பாட்டுத் தளங்களில் வளர்ச்சிய அடைந்ததையும் எடுத்துரைக்கின்றது. கால வளர்ச்சிக்கு ஏற்ப படகர் இனமக்களின் சமூகம் முன்னேற்றம் அடைந்துள்ளது. நீலகிரியின் மலைவாழ் மக்களில் படகர்களின் வாழ்வியல் மாறறங்களைச் சொல்லோவியமாக இக்கட்டுரை எடுத்துரைத்துள்ளது.

**பொன்னியின் செல்வனில் அருள்மொழிவர்மனின் தனித்தன்மைகள்** என்னும் இவ்வாய்வுப்புத்தகப்பகுதி கட்டுரையானது அருள்மொழிவர்மனின் குணங்கள் புகழ்பெற்ற பேரரசரின் இயல்பான தனித்தன்மையைக் காட்டிலும் பெரிதும் வியப்பிற்குரியதாக அமைந்திருக்கின்றன என்பதை ஆராய்ந்திருக்கின்றன. அமரர் கல்கி எழுதிய வரலாற்றுப் புதினமான பொன்னியின் செல்வன் கி.பி. 1000ம் ஆண்டு சிறப்புற்று திகழ்ந்த சோழப் பேரரசை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. சோழர்களின் பொற்கால ஆட்சியைப் பற்றி சரித்திர நூல்களில் இருந்து தெரிந்துகொண்டதைக் காட்டிலும் பொன்னியின் செல்வனில்

இருந்தே பெரும்பாலான தமிழர்கள் ஆர்வத்துடன் கற்றிருக்கிறார்கள்.

அரிஞ்சயருக்கும் கலியாணிக்கும் பிறந்த சுந்தர சோழருக்குக் கடைசியில் பிறந்த அருள்மொழிவர்மன் அழகில், அன்பில், வீரத்தில் அனைவரையும் விட தனித்தன்மைப் பெற்று காணப்பட்டுள்ளான். அருள்மொழிவர்மன் பத்தொன்பதாம் அகவையில் ஈழப்போருக்குத் தலைமை வகித்து நடத்த, நானே இலங்கை சென்று வருகிறேன்! என்று பேசியது அவனது வீரச்சிறப்பை எடுத்துரைக்கிறது. ஈழப்போருக்கு செல்ல குந்தவையின் அனுமதியை விரும்பி காத்திருந்தமையில் இருந்து அருள்மொழிவர்மன் குந்தவை மீது கொண்ட அன்பு கடந்த மரியாதையையும் காட்டுகிறது.

குந்தவை சோழர் கண்டராதித்தருக்கும் செம்பியன் மாதேவிக்கும் பிறந்த சிவப்பக்திப் பூண்ட சேந்தன் அமுதன் அழைத்து வந்து புது மதுராந்தகனை மன்னராக்க முயல்கிற பொழுது சிங்காசனத்தின் மீது அருள்மொழிவர்மனுக்கு உள்ள பற்றற்ற நிலையைப் புரிந்து கொள்ளமுடிகிறது. இளவரசர் அருள்மொழிவர்மர் தமக்கு அளிக்கப்பட்ட இராஜ்யத்தைத் தம் சிறிய சித்தப்பா மதுராந்தகருக்கு அளித்துவிட்டார் என்ற வாய்மொழி செய்தி மக்களிடையே பரவியது. ‘பொன்னியின் செல்வரின் பெருங்குணத்துக்கு இது உகந்ததே’ என்று மக்கள்

கருதியமையும் இங்கு நினைவுகூரத்தக்கது. இச்சம்பவத்தினால் அருள்மொழிவர்மனுக்குக் கிடைத்த தியாகசிகர பட்டமும் அனைவராலும் ஏற்றுக்கொள்ள கூடியதாக இருக்கிறது.

**பால்மரக்காட்டினிலே நவிலும் ரப்பர் தொழிலாளர்களின் வாழ்வியல் பதிவுகள்** என்னும் இவ்வாய்வுக் கட்டுரையானது 'பால்மரக்காட்டினிலே' என்னும் நாவல் வழி மலேசியாவில் வெள்ளைக்காரனுக்குச் சொந்தமான விக்டரி எஸ்டேட்டில் தினக்கூலிகளானத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை எடுத்துரைக்கிறது. அகிலனால் படைக்கப்பட்ட 'பால்மரக்காட்டினிலே' என்னும் சமூகநாவலானது 1976-இல் கலைமகள் இதழில் மாதந்தோறும் இருபத்துநான்கு அத்தியாயங்களாக தினக்கூலிகளானத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை வெளிகாட்டிய ஓர் தொடர்கதை.

தமிழ்நாடு, கேரளா, மற்றும் இலங்கைகளிலிருந்து கொத்தடிமைகளாகக் கொண்டு வரப்பட்ட மக்கள் ரப்பர் தோட்டத்திலும் வெளிக்காட்டிலும் வேலைச் செய்தனர். ரப்பர் தோட்டத்தில் வேலைபார்க்கும் தொழிலாளர்களின் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. வேலைக்கு ஏற்றக்கூலி கிடைக்காது. எதிர்த்து கேட்டால் தண்டனை வேண்டுமென்றால் கிடைக்கும். இவர்களின்

குழந்தைகள் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்திருக்கின்றனர். எல்லா நாட்களும் கொத்தடிமைகளாக வேலைச் செய்யும் இவர்களின் பொழுதுப்போக்கு மாதத்திற்கு இருமுறை திரைப்படம் பார்ப்பதாகும்.

முருகனுக்கும் முருகனின் தாய்மாமன் மகளான காமாட்சிக்கும் திருமணம் எனப் பெற்றோர்கள் முடிவு செய்திருந்த நிலையில் அவன் வேலைப் பார்க்கும் கோலாலம்பூரில் வசதியானப் பெண்ணான ராதாவை காதலித்து திருமணமும் செய்துக் கொண்டான். சின்னச்சாமியின் தங்கையான செல்லத்திடம் டிரஸ்ஸர் மாதவன் ஆள்நடமாட்டம் இல்லாத வடக்கு மேட்டில் பாலியல் பலாத்காரம் செய்ய முயல்கிறான். இவ்வாறு காதலையும் பெண்களின் கற்புக்கு பாதுகாப்பு இல்லாத நிலையையும ஆசிரியர் தன் நாவல் வழி சுட்டியுள்ளார்.

வேலம்மாள் வேலைபார்க்கும் தோட்டத்தின் பக்கத்து தோட்டத்தில் நோட்டீஸ் கொடுத்ததை அறிந்து வேதனை அடைகிறாள். தன் தம்பியின் வாழ்க்கை இனி என்னவாகும் என்ற விரக்தியில் தாங்கள் சுப்பன் கங்காணியால் ஏமாற்றப்பட்டடு மலேசியா வந்த துன்பத்தைப் புலம்புகிறாள். இந்நாவலின் வழி இரண்டாம் உலகப்போர் வரலாற்றுச் செய்திகளையும் அறிந்துக் கொள்ளமுடிந்தது.

மேற்கண்ட அனைத்து ஆய்வுக்கட்டுரை புத்தகப்பகுதிகளும் தரமான ஆய்வுச் சிந்தனையுடன் ஆராயப்பட்டு கல்வி சான்றோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் பா. ம. ஜெயகலா**

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1. | இரும்புகுதிரைகள் நுவலும் பெண்ணியம்<br>முனைவர் நே. நிஷாநேவிஸ் | 1-28 |
| 2. | பாடகர் வரலாறு கூறும் குறிஞ்சித்தேன் நாவல் - பண்பாட்டு மரபும் மாற்றமும்<br>முனைவர் ஜோ. பென்னி | 29-57 |
| 3. | பொன்னியின் செல்வனில் அருள்மொழிவர்மனின் தனித்தன்மைகள்<br>முனைவர் த.மகேஸ்வரி | 58-87 |
| 4. | பால்மரக்காட்டினிலே நவிலும் ரப்பர் தொழிலாளர்களின் வாழ்வியல் பதிவுகள்<br>முனைவர் பா. ம. ஜெயகலா | 88-116 |

# Feminism as Evinced in “Irumbukuthiraigal”

**Dr N. NishaNavis,** Assistant Professor, Department of Tamil,
S.T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD**: **https://orcid.org/0000-0001-9409-5597**
**DOI: 10.5281/zenodo.5533921**

## Abstract

*All over the world, the male gender is aimed at empowering women because this is a patriarchal society. Gender is the male’s own domain that owns the outside work and subjugates women in the home. Therefore, woman’s participation and opportunity is given to women is less. From Sangam literature to the literature of justice of the present day has laid down many constructions that a woman should cultivate an attitude like this. Although women have begun to emerge from the grip of slavery over time, violence and violence against women continue to this day. Many women pursue the god of gaining equality, freedom, and value in family and community, as well as the ability to equally determine their lives. The novel “Irumbukuthiraigal” (Iron Horses) discusses the living conditions of women and the changing attitude.*

**Keywords:** Feminism, “Irumbukuthiraigal” housewife, chastity.

## References

[1] Balakumaran. *Irumbu Kuthirai*. Visa Publications, Chennai, 2020.

[2] Illampuranar. (Uraiasiriyar). *Tholkappiam*

*Porulathikaram.* Saraths pathippagam, Chennai.

[3] Era. Kamarasu. *Tamil Sitithalgalin Vali Uruvana naveena thiranaivu pokkugal*. Tamil University, Tanjur, 2014.

[3] Dr Era.Jeyapal. *Agananooru*. New Century Book House, Chennai, 2017.

[4] P.L.Rajendiran. *Pengalin Perumaigal*. Poongodi Pathippagam, Chennai, 1996.

[5] Sirpi Bala Subramanian(Uraiasiriyar). *Thirukkural*. Thamarai Pathippagam, Chennai, 2008.

[6] Dr. Thurai Rasaram. *Pathinenkilkanakku Noolgal.* Mullai Nilayam, Chennai, 2012.

[7] Dr M. Palaniappan. *Penniya Vasippum Pen eluthu thiranaivum.* Kaviya Mani Apset printers, Chennai, 2003.

[8] K.Parimalam. *Penniya Parvai Thamizhini,* Meera Apset Printers, Chennai, 2008.

[9] S. Muthu Chithambaram . Penniyam thotamum. Valarchiyum, New Century Book House, Chennai, 2017.



**Isbn Number**: 978-93-91115-54-8

# "இரும்புகுதிரைகள்" நுவலும் பெண்ணியம்

**முனைவர் நே. நிஷாநேவிஸ்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-9409-5597
**DOI: 10.5281/zenodo.5533921**

**ஆய்வு சுருக்கம்**

உலகம் முழுவதும் பால் வகை என்பது ஆண் பெண்ணை அதிகாரம் செய்யும் பான்மையில் அமைந்துள்ளது. ஏனெனில் இது ஆணாதிக்க சமூகம் வகுத்தது தான். பால் வகை என்பது ஆண் தனக்குரிய களமாக வெளி வேலைகளையும் பெண்ணுக்கு இல்லம் என்பதை உரிமையாக்கி அதற்குள் அவளை ஆட்படுத்துகிறான். ஆதலால் பெண்ணின் இயக்கம் குறைந்தது. இதற்காகவே சங்க இலக்கியம், நீதி இலக்கியம் தொடங்கி இன்று வரை பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று பல கட்டுமானங்களை அடுக்கி வைததுள்ளனர். காலம் செல்லச் செல்ல அடிமை பிடியிலிருந்து பெண் வெளிவர ஆரம்பித்திருக்கிறாள் எனினும் இன்றைய காலகட்டத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் கொடுமைகளும் அரங்கேறிக் கொண்டு தான் இருக்கின்றன. பல பெண்கள் குடும்பம், சமூகம் போன்றவற்றில் சமத்துவம், விடுதலை, மதிப்பு

 **Isbn Number**: 978-93-91115-54-8

போன்றவற்றைப் பெற்றுத் தங்கள் வாழ்வைச் சமமாக நிர்ணயித்துக் கொள்ளும் ஆற்றலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயலாற்றுகின்றனர். இரும்புகுதிரைகள் எனும் நாவலிலும் பெண்கள் வாழும் சூழ்நிலை குறித்தும் மனநிலையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

**கலைச்சொற்கள்:** பெண்ணியம், இரும்புகுதிரைகள், இல்லாள், கற்புநெறி.

**முன்னுரை**

பெண், ஆண் என்ற பாடுபாட்டிற்கு உயிரியல் பாகுபாடும், பணிகளும் அடிப்படை. இனவிருத்தி என்கிற உயிரியல் நிகழ்வுகள் ஒருவர் மற்றவரைச் சார்ந்திருப்பது அவசியமாகிறது. ஆண், பெண் என்பதில் சிக்கல் இல்லை. குடும்பம், நாகரிகம். தனியுடைமை, சமுதாயம் என்ற புதிய நிலைமைகள் தோன்றும் போதுதான் சிக்கல் வருகிறது. திருமணம் மூலம் குடும்பம் என்பதில் ஆண் பெண் இணையும் போது ஆண் குடும்பத்தலைவனாக ஆளுபவனாக நியமிக்கப்படுகிறான். இன விருத்திக்கு துணைக் காரணமாகவும் வீட்டின் வேலைகள் மட்டும் செய்வதற்காக பெண் நிர்ணயிக்கப்படுகிறாள். அதன் தொடர்ச்சியாக தமிழ் பண்பாடும் ஆணாதிக்க சிந்தனை சக்திகளாக மதமும் இலக்கியமும் பெண் மீது பல

 Isbn Number: 978-93-91115-54-8

கட்டமைப்புகளை கட்டியெழுப்பி இருக்கின்றன. அவற்றை விடுத்து பெண் தனக்கான தேடல்களில் ஈடுபடுவதை இந்நாவல் அலசுகிறது. பெண்ணுக்கான தளம் எது? அவள் எதை நோக்கி பயணிக்க வேண்டும். பெண் தனக்கான உரிமைகளையும் கடமைகளையும் உணர்வதோடு அதை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**இரும்புகுதிரைகள்**

இரும்புகுதிரைகள் நாவலை ஆசிரியர் பாலகுமாரன் எழுதியுள்ளார். முதன்மை கதாபாத்திரமான விஸ்வநாதனை மையப்படுத்தி கதை நகர்கிறது. இவர் லாரி கம்பெனியில் வேலை செய்கிறார். நன்றாக கவிதை எழுதக் கூடியவர். அவர் செய்யும் வேலையை விட கவிதையிலும் சினிமா டைரக்டர் ஆக வேண்டும் என்பது தான் அவர் ஆசை. இவர் தன் வாழ்வில் சந்திக்கும் பெண்களை குறித்தும் அவர்கள் வாழ்வில் சிந்தனையும் பெண்ணிய நோக்கில் ஆராயப்படுகிறது. விஸ்வநாதனின் மனைவி தாரிணி, பாலியல் தொழிலாளி வசந்தா, தோழி காயத்ரி இவர்களின் வாழ்வியல் கூறுகள் கூறப்படுகிறது. இதன் மூலம் பெண்கள் வாழ்கின்ற வாழ்க்கையில் ஒவ்வொரு தளத்திலும் பெண் தனக்கான ஏதோ ஒன்றை வகுத்துக் கொண்டு வாழ்கிறாள். சதாரண குடும்பப் பெண்ணின் மனநிலையையும் இன்றைய நவீன உலக


**Isbn Number**: 978-93-91115-54-8

பெண்ணின் மனநிலையையும் ஆசிரியர் தன் நாவலில் தெளிவுபட எடுத்துரைத்துள்ளார்.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பது பெண் விடுதலைக்கான மிக விரிந்த சட்டகம். இச்சட்டகத்தில் பாலியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட பெண்கள் தங்கள் விடுதலைக்காக மேற்கொள்ளும் முயற்சிகளும், அதற்கான இயக்கங்களும் அமைப்புகளும் குழுக்களும் மகளிரியல் ஆய்வுகளும் அடங்கும். பெண்ணின் மீது இதுவரை இருந்துவந்த மரபுப்பார்வையை உடைத்து யதார்த்தத்தை, சுயத்தை முன்நிறுத்தும் உரத்த குரலுமாகும். பெண்ணியம் என்ற சொல்லுக்கு,

> **பெண்கள் சமூகத்திலும் அலுவல்களிலும், வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றி அமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படும் முயற்சிகளும் ஆகும். (ச.முத்துச் சிதம்பரம், ப.2)**

மேலும் பெண்ணியம் என்பதற்கு “பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்” என்று ஒரு வரையறையைக் கார்டன் என்பவர் கொடுத்திருக்கிறார். மேலும் புட்சன்,

 **Isbn Number**: 978-93-91115-54-8

**பெண்ணியம் என்பது பெண்கள் பாலின பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் என்கிறார். (ச.முத்துச் சிதம்பரம், ப.3)**

சமூகம்தான் குடும்பத்தின் அடித்தளம் எனவே பெண்ணியம் என்பது குடும்பத்திலிருந்து தான் துவங்க வேண்டும். கணவன் மனைவியை நடத்தும் விதம் மூலம், தாய் தன் குழந்தைகளை சிறுவயதிலிருந்தே பாலின வேறுபாடின்றி சமத்துவமாக வளர்ப்பது மூலமும்ஆண் பெண் சமத்துவத்தை வகுப்பறையில் நடைமுறை படுத்துவதன் மூலமும் தான் சாத்தியமாக்கப்படும்.

## இல்லாள்

இல்லாள் என்பதற்கு இல்லத்தை ஆள்பவள் என்று பொருள். இல்லமாகிய அகம் இவளால் இன்புறும். இல்லறமாகிய நல்லறத்தை நடத்தி செல்லும் பொறுப்பு ஆணை விட பெண்ணுக்கே கொடுக்கப்படுகிறது. இவ்வாறு இல்லறம் நல்லறமாக அமைய பெண் தியாகம் செய்கிறாள். இல்லாள் இத்தகைய குணநலன்களுள் தான் இருக்க வேண்டும் என்று சமூதாயம் பல குணங்களை திணித்து வைத்துள்ளது. “கணவனே கண்கண்ட தெய்வம்” கணவனுக்கு பணிவிடை செய்வதற்காக சிறு வயதிலிருந்தே வீட்டு வேலைகளை சொல்லிச் கொடுத்து

 **Isbn Number**: 978-93-91115-54-8

வளர்க்கப்படுகிறாள். இதனால் சிறுவயது பெண் பிள்ளைகளை வீட்டுவேலைச் செய்யச் சொல்கிறார்கள். ஆண் குழந்தைகளுக்கு இவ்வேலைகளைப் பழக்கப்படுத்துவதில்லை.

இலக்கியமும் சமயமும் சமுதாயமும் பெண்கள் இந்த மனநிலையில் தான் இருக்க வேண்டும் என்கிறது. பெண் தான் மெல்லியள். இப்படித்தான் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். வீட்டைவிட்டு வெளியேச் செல்லக் கூடாது என்று கூறியே வளர்க்கப்படும் போது அக்கருத்துக்கு மாறாக பெண் தன்னை மாற்றிக் கொள்ளாது ஆட்படுத்திக் கொள்கிறாள்.

தாரிணி தன் கணவன் வருகைக்காக காத்திருக்கிறாள். அவள் கணவனை நினைத்து காதலில் திழைக்கிறாள். “புருஷன் என்பது சகலநேரத்திலும் பெண்களுக்குப் போதையானவன் தான். இங்கு பெண் சொத்து என்பது சரியில்லை. புருஷன் தான் சொத்து பிரிக்க முடியாத சொத்து. பெருஞ்செல்வம். எந்நேரமும் அவன் அருகே இருப்பதுதான் அழகு, சுகம், சௌகரியம் என்று ஆசிரியர் பதிவிடுகிறார். இவ்வாறு கணவனை தவிர வேறு எண்ணமில்லாதவளாகவும் அவனுக்கு என்ன பிடிக்கும், அவன் தேவை என்ன என்பதை தெரிந்து முழுநேர பணியாளாக வேலை செய்கிறார்கள். பண்டையக் காலந் தொட்டே இல்லத்தில் முன் கட்டு


Isbn Number: 978-93-91115-54-8

ஆண்களுக்கும் பின் கட்டு பெண்களுக்கு உரியதாக இருந்தது.

> **சமையல் தொழிலுக்காகவே பெண்கள் பிறந்திருக்கிறார்கள் என்பது மன்னிக்க முடியாத வர்ணாசிரம்ம தத்துவமாகும். செருப்பு தைப்பதற்காகவே ஒரு சாதி என்பதும், துணி வெளிப்பதற்காகவே ஒரு சாதி என்பதும் மயிர் நீக்குவதற்காகவே ஒரு சாதி என்பதும் எப்படி மகா கொடுமையான பாகுபாடு என்கிறோமோ அதைப்போலவே அதைவிடப் பன்மடங்கு அதி மோசமானது தான் சமையல் தொழிலுக்காகவே பெண்கள் இருக்கின்றனர் என்பதாகும். (பி.எல்.ராஜேந்திரன், ப.7)**

ஒருவனுக்கு அமையும் இல்லறத்துணை நல்லவளாக கணவனை அனுசரித்து நடக்கும் பெண்ணாக இருத்தல் வேண்டும் என்பதனை, ‘மனைத்தக்க மாண்புடையள்’ (குறள். 51) என்று திருவள்ளுவர் நவிலுகின்றார். அதேபோல் இல்வாழ்க்கைக்கு ஏற்ற நல்ல குணங்கள் உடையவளாகவும் தன் கணவனை செல்வத்திற்கு ஒப்ப கருதுபவளாக ஒரு பெண் இருக்க வேண்டும் என்பதை,

> **தற்காத்துக் தற்கொண்டாற் மேனரித்தகை சான்ற**
> **சோற்காத்துச் சோர்விலான் பெண் (குறள் .56)**

 **Isbn Number**: 978-93-91115-54-8

கற்புநெறி வழுவாது தன்னைக் காத்துக் கொண்டு தன் கணவனின் பெருமைபேசி, அவனை காப்பவளே சிறந்த பெண் என்கிறார் வள்ளுவர்.

இலக்கியங்களில் அதிலும் நீதி இலக்கியங்களில் பெண்ணுக்கு மட்டுமான கற்பிதங்கள் அதிதமாக காணப்படுகிறது. “இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பள இங்கிலஷ் படிச்சாலும் இன்பத் தமிழ் நாட்டுல” என்று ஒரு திரைப்படப் பாடல் வரிகளிலும் இதையே உணர்த்தி நிற்கின்றன. பெண்ணுக்கான உலகம் கணவன், குழந்தைகள் வீட்டு வேலைகள், தொலைக்காட்சி தொடர்கள் என்றே ஆகிவிட்டது.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் ஓர் ஆணிற்கான கடமையாகக் கருதப்பட்ட அதே நேரத்தில், பெண் தற்காத்துத் தற்கொண்டான் பேணி, தகைசார்ந்த சொற்காக்க வேண்டி வளர்க்கப்பட்டாள். நீதி நூல்கள் காலத்தில் பெண்கள் மீது திணிக்கப்பெற்ற அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் கடமைகள் முதலானவை அவர்களை இல்லற வட்டத்திலிருந்து வெளிவர விடவில்லை. அந்தச் சிறுவட்டத்திலிருந்து கொண்டு தன் கணவனைத் தன் பிள்ளைகளைத் தன் சுற்றத்தாரை மகிழ்விக்க வேண்டிய மகிழ்ச்சிப் பொருளாக பெண்கள் வாழ வேண்டியவர்களானார்கள். இல்லறத்தை

 **Isbn Number**: 978-93-91115-54-8

நல்லறமாக நடத்த வேண்டிய பெரும் பணியில் பெண்கள் தங்களை விட்டுக் கொடுக்க வேண்டியவர்களாயினர்.

**கற்புநெறி**

எது கற்பு? எங்கிருக்கிறது? யாருக்கு கற்புநெறி வேண்டும்? சங்க காலம் தொடங்கி கற்பிற்கு பலவித கற்பிதங்களை சான்றோர் உருவாக்கி உள்ளனர். ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் என்னும் நிகழ்வின் மூலம் சேர்ந்து வாழும் குடும்ப வாழ்வு சங்க காலத்தில் கற்பு என அழைக்கப்பட்டது.

**கற்பு எனப்படுவது கரணமொடு புணர**
**கொளற்கு உரிமரபின் கிழவன் கிழத்தியை**
**கொடைக்கு உரி மரபினோர் கொடுப்ப**
**கொள்வதுவே" (தொல், பொருள். 1)**

கற்பு எனப்படுவது கொள்வதற்குரிய மரபுடைய தலைவன் கொடுப்பதற்குரிய மரபுடையவர், தலைவியை உரியச் சடங்குகளுடன் கொடுக்க கொள்வதாகும். கொடுப்பார் எனப்படுகின்ற தலைவியின் சுற்றத்தார் இல்லாது தலைவனும் தலைவியும் உடன்போக்கு செய்வதும் கற்பு எனப்படும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

நீதி இலக்கியங்கள் தோன்றிய காலகட்டத்தில் கற்பின் இலக்கணம் வேறாக உருமாறியிருந்தது. அற இலக்கியத்தில், "கற்புடைய பெண் அமிர்து"

 **Isbn Number**: 978-93-91115-54-8

(சிறுபஞ்சமூலம்.4) கற்புடைய பெண் கணவனுக்கு அமிர்தம் போன்றவள் ஆகிறாள். கற்புடைய மனைவியை பெறும் பேறு ஒன்றும் இல்லை. பெண்ணிடம் கற்பு பற்றிய எண்ணம், மன உறுதி வாய்க்கப் பெற்றிருப்பின் தன்னைச் சார்ந்தவரை வழிநடத்தும் அறிவு அவரிடம்உண்டாகும். எனவே அப்பெண்ணை விட மேன்மை பொருந்திய பொருள் ஏதுமில்லை என்கிறார். தன் கணவனை மட்டும் மனதில் நினைத்து அவனுக்கான பணிவிடைகளைச் செய்யும் போது தான் கற்புடையவள் எனப்படுகிறாள். கணவனைத் தவிர வேறு ஆடவனை நினைத்து பார்க்காமல் சுய ஒழுக்கத்துடன் வாழும் பெண்ணை கற்புகரசி, பதிவிரதை என்று இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன.

இந்நாவலில் விஸ்வநாதன் முதன்முறையாக விபசார தொழில் செய்யும் பெண்ணைக் சந்திக்கிறான். அவளின் தொழிலை நினைத்துப் பார்த்து அவள் செய்வதும் ஒரு தொழில் தானே என்ற அடிப்படையில் “நெடுங்காலம் வாழ யாருக்குத்தான் ஆசை இல்லை. உலகத்தின் சகல தொழில்களும் நல்வாழ்க்கையை, வளமையைச் அமைதியை எதிர்பார்த்துத் தானே இதில் இவள் தொழில் என்ன விதிவிலக்கு” என்று மனதினுள் பேசிக்கொள்கிறான்.

 **Isbn Number**: 978-93-91115-54-8

விஸ்வநாதன் பாலியல் தொழிலும் ஒரு தொழில் என்ற அடிப்படையில் பார்க்கிறான். பாலியல் தொழில் செய்யும் பெண்கள் விரும்பி இத்தொழிலைச் செய்வதில்லை பல்வேறு காரணங்களால் இத்தொழிலுக்குள் தள்ளப்படுகிறார்கள். இத்தொழிலுக்குச் செல்லும் பெண்களுக்கு இழைக்கப்படும் பல்வேறு வன்முறைகளை வேரறுக்க வேண்டும். இதற்கு பாலியல் உறவில் ஈடுபடும் பெண்களைக் குறித்து ஆராய வேண்டும். இத்தொழிலுக்கு வரும் பெண்கள் பாலியல் ஒழுங்கை மீறும் பெண்களாக பெரும்பாலும் இளம் விதவைகள், வறியவர்கள், குடும்பப்பெண்கள், திருமணத்தை வெறுத்து சுதந்திரம் பாலியல் வாழ்வு நடத்துபவர்களாக இருப்பதால் இவர்களை குறித்து ஆராயவேண்டும் என்று பெண்ணியளாலர்கள் வலியுறுத்துகின்றனர்.

வசந்தாவிடம் விஸ்வநாதன் தன்னையும் அறியாமல் அதிக நேரம் மனம் விட்டு பேசுகிறான். அவள் வலக்கையை இரண்டு கைகளாலும் மெல்லப் பற்றி கொண்டான். உதடு பதிய அவள் புறங்கையில் முத்தமிட்டான். வசந்தா இடக்கையில் அவன் தலையை உருட்டி விட்டாள். பிடரியை நீவி விட்டாள். விஸ்வநாதனின் கற்பு பற்றிய மனநிலையையும் வசந்தாவின் கற்பு பற்றிய மனநிலையையும்

 **Isbn Number**: 978-93-91115-54-8

ஒப்புநோக்கினால் வசந்தாவிற்கு அது தொழில், அந்தவகையில் கற்பு நெறியில் அவள் தவறவில்லை. விஸ்வநாதன் தன் மனைவி இருக்கும் இடத்தில் வசந்தாவை வைத்துள்ளான். ஒரு நிமிட தடுமாற்றமே ஆனாலும் விஸ்வநாதன் தன் மனதில் வசந்தாவை நினைத்த நிலையில் கற்பை இழந்து விடுபவன் ஆகின்றான்.

கற்பு என்பது தனி மனித ஒழுக்கமாகும். இருவருக்கும் மனதளவிலும் உடலளவிலும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலைப்பாட்டில் வாழ வேண்டும். இதுவே கற்புநெறி எனப்படுகிறது. ஆனால் நம் சமுதாயத்தில் “ஆண் எத்தனை பெண்களோடும் முறைப்படி பாலியல் உறவு கொண்டாலும் அதற்காக அவனுடைய ‘சுத்தம்’ ஏதும் குறைவதாகக் கருதுவது இல்லை”. (க.பரிமளம், ப.51) பெண்ணுக்கு இத்தகைய நிலை இல்லை. பெண் முறைப்படி ஒருவனுடன் மணமாகி வாழ்வதற்கு ஒரு சந்தர்ப்பம் தான் வழங்கப்பட்டுள்ளது. கணவன் இறந்தபின், பிறிதொரு ஆணுடன் முறைப்படி மணமாகிப் பாலியல் உறவு பூணத் தகுதியற்றவளாகப் பெண் ஆக்கப்பட்டிருக்கிறாள். அதன்பின் முறையில்லா விதத்தில் பாலியல் வாழ்வை மறைமுகமாகக் குற்றவுணர்வோடு நடத்த வேண்டியுள்ளது. அல்லது பாலியலை அடக்கித் துறவிபோல் வாழ வேண்டியுள்ளது.


Isbn Number: 978-93-91115-54-8

பெண் இவ்வாறு ஒடுக்கப்படுவதற்கு அடிப்படை காரணம் பாலியல் சார்ந்ததாக அமைகிறது.

சமுதாயத்தில் இளம் விதவைப் பெண்ணுக்குப் பாலியல் ஒழுக்கம் என்பதே ஒரு தண்டனையைப் போலச் சுமத்தப்பட்டுள்ளது. இதற்கு மிக பெரிய சான்று குழந்தை திருமணங்கள் என்றால் மிகையாகாது. கற்பு என்பது இருபாலருக்குமானது. இல்லற வாழ்வில் இருவரும் கற்பு நெறியில் ஒழுக வேண்டும் என்பதை மிகவும் இன்றியமையாததாகும் என்று பாரதி எடுத்துரைக்கிறார்.

**கற்பு நிலையென்று சொல்வந் தாரிரு**
**காட்சிக் மேஃது வைப்போம் (பெ.வி.கு ப.5)**

என்று கூறும் அவர் ஆணெல்லாம் கற்பை விட்டுத்தவறு செய்தால், அப்போது பெண்மையும் கற்பழிந்திடாதோ என்று கேட்கிறார். கற்பு என்னும் ஒழுக்கம் ஆண்களுக்கு உரிய பண்பாகவே அந்நாளில் கருதப்பட்டது. ஆனால் சங்க காலத்தில் கணவன் பரத்தமை மேற்கொள்ளுதல் இயல்பான ஒன்றாக கருதப்பட்டது. ஆனால் மனைவின் நிலையோ கணவனுக்காக காத்திருத்தலை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவளால் ஊடல் மட்டுமே கொள்ள முடிகிறது. கணவனும் கற்பு ஒழுக்கத்தில் இருக்கும் போது தான் வள்ளுவர் கூறியது போல் மிகச் சிறந்த துணைவியாக இருப்பாள்.

 **Isbn Number**: 978-93-91115-54-8

இன்றைய சமுதாயம் அறிவியல் வளர்ச்சி பெற்றிருந்தாலும் இன்றும் வாழ்வியல் சூழலில் பெண்ணுக்கு மட்டுமே கற்பு நெறி போதிக்கப்படுகிறது. கற்பு மனம் சார்ந்தில்லாமல் உடல் சார்ந்தே நிர்ணயிக்கப்படுகிறது. குடும்ப கௌரவத்தை அவ்வீட்டின் பெண் மீது கட்டியமைக்கின்றனர். ஆணும் பெண்ணும் சமம் என்று எவ்வளவு பேசினாலும் நடைமுறையில் இன்றும் எல்லா இடங்களிலும் சாத்தியப்படவில்லை என்றே கூறலாம். கற்பு என்னும் ஒழுக்க நெறி இருவருக்குமானது என்று எப்போது முழுமையாக கடைபிடிக்கப்படுகிறதோ அப்போது தான் சமுதாயம் சமநிலையை நோக்கி பயணிக்க முடியும்.

**நவீன பெண் சிந்தனை**

இரும்புகுதிரை என்பதற்கு ஆக்க சக்தி என ஆசிரியர் பதிவிடுகிறார். பெண்ணின் இயல்புகளை ஒவ்வொரு சூழ்நிலையிலும் பல்வேறு விதமாக பெண்களைக் குறித்தும் கூறப்பட்டுள்ளது. தற்காலப் பெண்களின் நிலையும் அவர்களின் எண்ணவோட்டமும் எதிர்காலம் குறித்தும் பல பெண்ணிய எழுத்தாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். பெண்களை அழுத்தி வைத்திருக்கும் சமுக கட்டுப்பாடுகளும் கருத்துப்போக்கும் மாற வேண்டும் என்னும் எண்ணத்தோடு பேசுவதும் எழுதுவதும் போராடுவதும் பெண்ணின் பரிணாமத்தை


**Isbn Number**: 978-93-91115-54-8





உள்ளடக்கியது. பெண் மதிக்கப்படும் போது தான் சமுதாயம் மிளிரும் ஏனென்றால் ஒரு சமுதாயத்தின் இயக்கத்திற்கும் பெண்ணின் பங்களிப்பும் அவசியமாகிறது.

நாவலாசிரியர் பெண்ணியச் சிந்தனைகளை பின்நவீனத்துவம் மூலம் பெண்ணுக்கு இருந்த தடைகளை நீக்கி தகர்த்தெரிந்து புதிய தளத்தை உருவாக்கிறார். காயத்திரி தன் சகோதரி துர்க்காவிடம் கூறும் போது “உன்னை ரொம்ப டெக்கரேட் பண்ணிக்கிற, பொண்ணாப் பொறந்ததற்கு ரொம்ப சந்தோசப்படற. இன்னும் நிறைய பொம்மனாட்டித்தனம் வேணும்னு ஆசைப்படற உனக்கு நல்ல உடுத்திக்கிடத் தான் தெரியும். உலகம் தெரியாதுன்னு உன்கூட இருக்கிறவாளை நெனைக்க வைக்கிற” என்று சாடுகிறாள். இன்றைய காலச் சூழலில் பெண்கள் அழகு சாதனப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளனர். தன்னை அழகுபடுத்தி பிறருக்கு தன் அழகை மெருகூட்டுவதற்காக அலைபேசி செயலிகளைப் பயன்படுத்துகின்றனர். பெண்ணின் குணநலன்கள் முதல் எண்ணவோட்டங்கள் எல்லாம் நல்லதைத் தேடி செல்லாமல் தன்னை அழகுபடுத்திக் கொள்வதிலேயே அதிக அளவில் செலவிடுகின்றனர். இந்த அழகு நிரந்தரமற்றது என்பதை உணர

 **Isbn Number**: 978-93-91115-54-8

மறுக்கின்றனர் என்பதையும் நாவலாசிரியர் எடுத்துரைக்கிறார்.

உலகம் ஆண்களுக்கானது இதுவரைக்கும் ஆண்கள் உண்மைகளைப் பேசப் பெண்கள் கேட்டிருந்தனர். இன்றோ பெண்கள் பேசுகின்றனர். அவர்கள் மரபு வழி உண்மைகளை எடுத்துரைக்கின்றனர். அவர்கள் பேசுவதைக் கேட்க பிறருக்குப் பொறுமையும் தன்னடக்கமும் தான் தேவையாக இருக்கிறது. பெண்களின் பிரச்சனையை பெண் கண்ணோட்டத்தில் பெண் எடுத்துரைக்கும் போது தான்அது உண்மைத் தன்மையாக அமையும்.

காயத்திரி விஸ்வநாதனிடம் எனக்கு உங்கள் மூலம் ஒரு குழந்தை வேண்டும் என்று கேட்கிறாள். விஸ்வநாதன் திடிக்கிட்டு நீ என்ன பைத்தியமா என்று வினவுகின்றான். அதற்கு காயத்திரி, “ஒரு ஆளுக்கு என்னையும் பங்கு போட்டு எனக்குப் பொறக்குற குழந்தையும் பங்கு போட்டு என்னுடைய புத்தி கொஞ்சம் அந்த ஆளுடைய புத்தி கொஞ்சம், அப்பா ஒரு பக்கம் அம்மா ஒரு பக்கம்ன்னு அலைக்கழிக்குறதுக்கு பதிலா மொத்தமா என் புத்தியை ஆரம்பத்லேர்ந்து என் இஷ்டமாக குழந்தைக்கு ஊட்டி வளர்க்கலாமில்லையா?” என்று கூறுகிறாள். விஸ்வநாதன் அதற்கு உடன்பட


**Isbn Number**: 978-93-91115-54-8

மறுத்தாலும் இவளின் எண்ணத்தை நினைத்து வியந்து நிற்கிறான்.

**என் வாழ்வு-**
**உலகம் எனக்கு இட்ட பிச்சை இல்லை**
**என் சோற்றில் யார் பெயரும் எழுதப்படவில்லை**
**நான் ஜீவிக்க சமாதானங்கள் தேவையில்லை**

என்று கவிஞர் வத்ஸலா பாடியுள்ளதில், நான் தனிப்பட்டவள் யாரையும் சார்ந்து வழ வேண்டிய தேவை எனக்கு இல்லை’ என்று கூறுவதில் சுயசிந்தனை மற்றும் சுய இயக்கமுடைய பெண்ணின் உணர்வும் தொனியும் பெண் மொழியாக வெளிப்பட்டுள்ளது. (இரா.பிரேமா ப.34)

சங்ககாலம் முதல் இக்காலம் வரை ஔவையார் நிலைத்து நிற்கிறார். அனைத்து பெண்குலத்துக்கும் முன்மாதிரியாக திகழ்ந்துள்ளார். பெண்களும் ஆண்களை ஒத்த உணர்வுடையவர்களே எங்களுக்கும் காதல் உண்டு; காமம் உண்டுஅதைச் சமுகத்திற்கு அஞ்சிமறைத்து வாழ வேண்டிய கோழைத்தனம் தேவையற்றது என்று தம் பாடல்கள் வழி காட்டியுள்ளார். தாம் கொண்ட காதலை வெளிக்காட்டுவது இயல்பன்று என்பது தொல்காப்பியர் மரபு. நாங்களும் மனிதப் பிறவிகள் தான் ஆனால் எம்முறு காமம் வெளிப்படுத்துவது தான் இயல்பு’ என்ற நோக்கில் ஔவையார், முட்டுவேன் கொல், தாக்குவேன் கொல்’


**Isbn Number**: 978-93-91115-54-8

(குறுந்.28) என்று உரைத்ததுடன் பிரிந்து சென்ற கணவனுக்காக வீட்டில் ஆற்றியிருந்து அழுவதை விடுத்து,அவன் சென்ற இடத்திற்கே தேடித் போவேன். (அகம்.147) என்று கூறும் தைரியமும், அவரை மற்ற பெண்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இவ்வாறு பெண்ணின் உண்மையான உணர்வுகள் மறைக்கப்படுவதைக் காட்டிலும், அவற்றை வெளிப்படுத்தி அவள் துன்பத்தை தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஆராயஆணாதிக்கச் சமுகம் முற்பட வேண்டும். ஔவையாரின் சங்க அகப்புறப் பாடல்களை மேற்கூரியவாறு ஒருங்கே நோக்கும் போது அவர் மரபு வழி வந்த பெண்மை என்ற கருத்தாக்கத்தை,போற்றாது. ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்வு ஒன்று தான். வீரமுண்டு, ஆணுக்கான அனைத்து உணர்வுகளும் பெண்ணுக்கும் உண்டு என்ற வாழ்வியல் உண்மையைப் பேசிப் பெண் குலத்திற்கே பெருமை தந்த முதல் பெண்மணியாகத் திகழ்ந்துள்ளார் என்பது பெறப்படுகிறது.

நாவலாசிரியர் மேலும் ஓர் இடத்தில் காயத்ரி மூலம் பெண்ணின் அடுத்தக்கட்ட பயணத்தை எடுத்துரைக்கிறார். காயத்ரி கூறுகையில், “எனக்கு இரண்டு அண்ணா இருந்தாலும் நான் வேளைக்கு போவேன்.” என்கிறாள். இன்றைய கால பெண்களில்

 Isbn Number: 978-93-91115-54-8

பலர் வேளைக்கு போக வேண்டும் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றே கல்வி கற்கின்றனர். ஆனால் சிலர் ஒரு பட்டப்படிப்பு முடித்தால்போதும் என்ற நிலையிலேயே கல்வி கற்கின்றனர். பெற்றோரின் நிழலிலிருந்து பின் கணவனின் நிழலில் வாழ்கை நடத்திச் செல்கின்றனர். இதுவே போதும் என்று மனநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

**பெண் புதிர்**

ஆண்கள் இலக்கியங்களைப் படைக்கிறார்கள் அந்த இலக்கியங்களுக்குள்ளே பெண்களையும் படைக்கிறார்கள். அவ்வாறு இலக்கியங்கலுக்குள்ளே படைக்கப் பெற்ற பெண்கள் உயர்வான வாழ்வினைப் பெற்றவர்களாகக் காட்டப் பெற்றிருப்பார்கள். உண்மையில் பெண்கள் உயர்வான இடத்தைப் பெற்றுள்ளார்களா? என்றால் அந்த கேள்விக்குப் பதில் இல்லை.

> **“ஆண்களால் படைக்கப் பெற்றப் இலக்கியங்களில் இடம்பெறும் பெண்கள் உண்மையான பெண்களாக, உண்மை உணர்ச்சி உடையவர்களாக இருப்பதில்லை. (முனைவர் மு.பழனியப்பன், பக். 27) என்கிறார்.**

பெண்ணைக் குறித்த பார்வை மாற வேண்டும். “கருத்தியல் தளத்தில் ஆய்வாளர்களிடம் பெண்கள்

 **Isbn Number**: 978-93-91115-54-8

குறித்த பார்வையில் மாற்றம் பாராமல் சமத்துவம் சாத்தியமில்லை” (இரா. காமராசு, 147) என்கிறார்.

ஆண்களால் ஆண்களுக்காக மட்டுமே இவ்வுலகம் கட்டி உருவாக்கப் பட்டுள்ளது. எல்லா மத மறை நூல்களும் ஆண்களால் எழுதப்பட்டவை. ஆணின் மனவொட்டத்தைப் பிரதிபலிப்பவையாகவே உள்ளது. அதுமட்டுமன்று சங்க இலக்கியம் தொடங்கி இக்காலம் வரை பெரும்பாலும் ஆண் எழுத்தாளர்களே, ஆணாதிக்கம் பண்பாட்டுச் சுழல் ஆணின் பாலியல் வேட்டைகளும் தேவையும் மட்டுமே இலக்கியப் படுத்தப் பட்டுள்ளன. பெண்ணின் பாலியல் வேட்கை நடைமுறை வாழ்கையில் மட்டுமல்ல; இலக்கியத்திலும் அனுமதிக்கப் படுவதில்லை. பண்பாட்டு பார்வையில் பெண்களைப் பொத்திப் பாதுகாத்த ஆணின் அரசியல் ஒரு சில பெண் படைபாளர்களால் உடைத்தெரியப்பட்டுள்ளது.

இலக்கியங்கள் மட்டுமன்று மதங்கள், சாதிகள், என்ற பெயரில் பெண்ணை அடக்குகின்றனர். மதங்கள், சாமியார்கள், பூசாரிகள் போன்றோரால் கட்டி காப்பாற்றி வரும் சடங்குகள், சம்ப்ரதாயங்கள்,பரிகாரங்கள்,என்று அனைத்தும் பெண்ணின் மீது ஆதிக்கமும் அதிகாரமும் செலுத்தி வருகின்றனர். இவ்வாறு பெண்களை மதங்கள் ஆதிக்கம் செலுத்துவதன் தொடர்ச்சியாக பெண்கள் போலி சாமியார்களை நம்பி தன்னை இழக்கின்றனர்.


**Isbn Number**: 978-93-91115-54-8

மூடநம்பிக்கைகளில் சிக்கி தவிக்கின்றனர். மூடநம்பிககைகளைபெண்கள் வாயிலாக அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்கின்றனர். இதிலிருந்து பெண்கள் வெளிவர வேண்டும். இறைவன் பற்றிய புரிதல் இருக்க வேண்டும். அப்போது தான் விழிப்புணர்வுடன் மூடநம்பிக்கைகளைக் களைந்து வாழமுடியும்.

**பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**

இன்றைய சமுதாயச சூழல் பெண்களுக்கு புதுவிதமான பிரச்சனைகளைத் தருவிக்கின்றது. அறிவியல் வளர்ச்சியாக அலைப்பேசி இருந்தாலும் பெண்கள் விழிப்புணர்வு குறைப்பாட்டினால் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். தாமி(செல்பி), டிக்-டாக் மூலம் புகைப்படம் எடுத்து சமூக தளங்களில் பதிவிடுவதால் பல பாலியல் பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றனர். அரைகுறை ஆடையுடன் புகைப்படம் எடுப்பது தற்போது நடப்பு வழக்காகி (Fashion) விட்டது. மேலும் புலனம் (whatsapp), வலையொலி (Youtube), படவரி (Instagram), அளாவி(We-chat), முகநூல்(Facebook), கீச்சகம்(Twitter), என்று பல செயலிகளையும் பயன்படுத்துகின்றனர். இத்தகைய வலைதளங்களைப் பயன்படுத்துவது தவறில்லை. விழிப்புணர்வுடன் இத்தளங்கள் பயன்படுத்துவது மிகவும்

 **Isbn Number**: 978-93-91115-54-8

முக்கியமானதாகும். இல்லையெனில் போலியான முகவரியில் தவறான ஆண்களிடம் சிக்க நேரிடும். அவ்வாறு இன்றைய காலகட்டத்தில் சிக்கிய பல பெண்களை குறித்து செய்திகள் வருகின்றன.

பெண்கள் எதிர்கொள்ளும் மிக முக்கியமான அடுத்த பிரச்சனை அழகியல் சார்ந்தது. தன்னை அழகுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் பெண்கள் காட்டும் ஆர்வம். பெருநிறுவனங்கள் தங்கள் விளம்பரங்கள் மூலமும்திரைப்படங்கள் மூலம் பெண் அழகாக தான் இருக்க வேண்டும். தன்னை அழகுபடுத்திக் கொள்ளவில்லையென்றால் தன்னம்பிக்கை இருக்காது, வாழ்வில் ஜெயிக்க முடியாது. திருமணம் நடைபெறாது என்ற கணக்கில் தனது நிறுவன அழகுசாதனப் பொருட்களை விற்பனை செய்கின்றனர். இதையே பெண்களும் முழுவதுமாக நம்பி தன்னுடைய நேரத்தையும், பணத்தையும் விரையமாக்குகின்றனர்.

மன உளைச்சல் தரும் பிரச்சனையாக, தொலைகாட்சி தொடர்கள் அமைகின்றன. பெண்களை இத்தொலைக்காட்சி தொடர்கள் அடிமைப்படுத்தி வைத்துள்ளது. இதனால் பெண்கள் மனரீதியாக பாதிக்கப்படுகின்றனர். தொலைக்காட்சி தொடர்களை தினமும் பார்க்க வேண்டும் என்று தங்களுடைய நேரத்தை வீணடிக்கின்றனர். எதிர்மறையான எண்ணங்களையே


**Isbn Number**: 978-93-91115-54-8





பெரும்பாலும் தொடர்கள் வெளிப்படுத்துகின்றன. இதனைப் பார்க்கும் பெண்கள் மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிக்கபடுகின்றன. இவ்வாறு பெண்கள் நவீன உலகத்தில் தங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு பதிலாக மேற்கூறிய காரணங்களால் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

கல்வி ஒன்றே இதற்குத் தீர்வு. பெண் ஆணுக்கு சமம் என்று கூறினால் மட்டும் போதாது அதற்காக தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய எண்ணங்களும் சிந்தனைகளும் தன்னை வளர்ச்சி பாதையில் முன்னேடுப்பவைகளாக அமைய வேண்டும். ஆண் மட்டும் வேலைக்கு சென்றுகுடும்பத்தை நடத்துவதற்காக பிறந்திருக்கிறான். அவள் தலையில் பொறுப்புகளை சுமத்திவிட்டு பெண் சோம்பேறியாக அவனை அண்டி பிழைக்கிறாள். இதிலே தன்னிறைவு அடைகிறாள். பெண் தன்னைச் சார்ந்த மக்களை பார்த்துக் கொள்ள வேண்டும் பொருளாதார ரீதியில் தன்னை மேம்படுத்திக் கொள்ளும் போது தான் சமத்துவம் குறித்து பேச முடியும். பொறுப்புகளை ஏற்று நடத்த முன்வர வேண்டும்.

**முடிவுரை**

ஆணை விட பெண் ஒருபடி கீழே தான் என்ற எண்ணம் இந்திய ஆண்களின் புத்தியில் மட்டுமல்ல

 **Isbn Number**: 978-93-91115-54-8

ரத்தத்திலும் ஊறிப்போன ஒன்றுதான். ஐக்கிய நாடுகள் வெளியிட்டுள்ள புதிய ஆய்வில் ஆண் பெண் என 90 சதவீதம் மக்கள் பெண்களுக்கு எதிராகவே செயல்படுகின்றன என்ற செய்தி வெளியாகியுள்ளது சிறு வயதிலிருந்தே, பெண் பலவீனமானவள், பாதுகாக்கப்பட வேண்டியவள் ஆணிலிருந்து வேறுபட்டவள், சமமானவள் அல்ல என்ற பார்வை இரு பாலருக்குமேவிதைக்கப்படுகிறது. இந்த நிலை ஆரம்ப கால கட்டத்திலேயே மாற வேண்டும்.

இரு பாலரும் சமம் என்பதை குடும்பங்கள் முதலில் முன்னெடுக்க வேண்டும். தொடர்ச்சியாக பள்ளிக் கூடங்கள் செயல்படுத்த வேண்டும். இதற்கு முதல் தேவையாக இரு பாலருக்கும் சம்மான் கல்வி வழங்க வேண்டும். எல்லா துறைகளிலும் கல்வி, வேலை செய்ய அனுமதிக்க வேண்டும். அதுமட்டுமன்று பெண்களின் ஆசையிலும் வாழ்க்கை இலட்சியத்திலும் தலைகீழான புரட்சி ஏற்பட வேண்டும். ஆண்கள் செய்கின்ற எல்லா வேலைகளுக்கும் பெண்கள் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும். ஆண் ஆதிக்கம் என்ற கட்டினை அறுத்தெறிந்து வெளியில் வர வேண்டும்.

ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்தினை எவ்வித எதிப்பும் இன்றி செயல்படுத்த என்ன செய்ய வேண்டும் என்று அலசி ஆராய வேண்டும். ஆண் எதிரி

 Isbn Number: 978-93-91115-54-8

அல்ல, குடும்ப அமைப்பை சிதைத்து விடாமல் இதற்குள் பெண் விடுதலையைச் சத்தியப் படுத்துவது எப்படி என சிந்திக்காமல் ஒரு அடி கூட நகர்த்த முடியாது என்ற புரிதலுடன் மெதுவாக ஆனால் உறுதியாக நகர்த்தல் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும். நேற்றை விட இன்று வெளிச்சம் கூடுதலாக இருக்கிறது என்ற தெளிவுடன் பயணிக்கும் போது ஆண் பெண்சமம் என்பது சாத்தியமாகும்.

**துணைநூற்பட்டியல்**


[1] பாலகுமாரன். *இரும்பு குதிரைகள்*. விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2020.

[2] இளம்பூரணார் (உரையாசிரியர்). *தொல்காப்பியம் பொருளதிகாரம்*, சாரதா பதிப்பகம், சென்னை.

[3] இரா.காமராசு. *தமிழ்ச் சிற்றிதழ்களின் வழி உருவான நவீனத்திறனாய்வுப் போக்குகள்.* தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 2014.

[3] முனைவர் இரா.ஜெயபால் (உரையாசிரியர்). *அகநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.

[4] பி.எல்.ராஜேந்திரன். *பெண்களின் பெருமைகள்.* பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1996.

[5] சிற்பி.பாலசுப்பிரமணியன் (உரையாசிரியர்). *திருக்குறள்*. தாமரைப்பதிப்பகம், சென்னை, 2018.


 **Isbn Number**: 978-93-91115-54-8

[6] டாக்டர் துரை இராசாராம். *பதினென் கீழ்கணக்கு.* முல்லை நிலையம், சென்னை, 2012.

[7] முனைவர் மு.பழனியப்பன். *பெண்ணிய வாசிப்பும் பெண்ணெழுத்துத் திறனாய்வும்.* காவ்யாமணி ஆட்செட், சென்னை, 2003.

[8] க.பரிமளம். *பெண்ணியப்பார்வை.* தமிழினி மீரா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை, 2008.

[9] ச.முத்துச் சிதம்பரம். *பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, 2017.

 **Isbn Number**: 978-93-91115-54-8

# History of Padagar Community as in "Kurinjiththen" Novel – Cultural Legacy and Changes

**Dr J. Benny**, Assistant Professor, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-7695-3738**
**DOI: 10.5281/zenodo.5533952**

## Abstract

*The "Kurinjiththen" Novel, a creation by Rajamkrishnan centres on the lifestyle of The Padagas of Neelagiri. The Novel makes us visualize the Padagas community who lived and relied completely inbound to the land and nature on the community who lived in togetherness and carried forward their cultural legacy. The inscriptions on the community's food, clothing, shelter, relationships, occupation, beliefs, rituals and festivals are from various ground researches made by the author on the community. Though the Padagas lived in alliance with the other communities such as Thodas, Kothar and Kurumbas, they still preserved their uniqueness in their legacy. The Padagas respected women and in the community, women were conceived as a resemblance to Lakshmi (The goddess of wealth). The Novel discusses how such a community that praised and respected women and their motherland later fell for the technological era, lost its identity and uniqueness and*

 **Isbn Number**: 978-93-91115-54-8

*ended up gaining hatreds. In addition, this work here aims to research on the Padagas cultural legacy and later changes, as per the inscription from "Kurinjiththen" Novel.*

**Keywords:** Rajamkrishnan, Kurinjithaen Novel, Padagas, lifestyle, cultural legacy, Changes.

## References

[1] Sakthivel.S. *Nattupuraviyal*, Manivasagar Pathippagam, Chennai, 2011.

[2] Sivasubramanian.A. *Enavaraiviyalum Tamil Naavalum*, New Century Book House, Chennai, 2014.

[3] Bhakthavatsala Bharathi, *Panpattu Maanidaviyal*, Meyyappan Pathipagam, Chithamparam, 2016.

[4] Packiyamary, *Vakaimai Nokkil Tamil Ilakkiya Varalaru*, Paavai Printers, Chennai, 2011

[5] Manikkanar.V. Suba. *Thirukkural Thelivurai*, Bala Graphics, Chennai, 2007.

[6] Rajamkrishnan. *KurinjiThaen, Naam Tamizhar Pathippagam*, Chennai, 2011.

[7] Vishwanathan.A. *Kalithogai*, New Century Book House, Chennai, 2007.

# படகர் வரலாறு கூறும் “குறிஞ்சித்தேன்” நாவல்- பண்பாட்டு மரபும் மாற்றமும்

**முனைவர் ஜோ. பென்னி,** உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலைஆய்வகம்,
தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-7695-3738**
**DOI: DOI: 10.5281/zenodo.5533952**


## ஆய்வு சுருக்கம்

நீலகிரியில் வாழும் படகர் இனத்தவரின் வாழ்வியலை மையமாகக் கொண்டு ராஜம்கிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்டது குறிஞ்சித்தேன் நாவல். மண்ணை மட்டுமே நம்பி இயற்கையோடு ஒன்றி, உறவுகளோடு இணைந்து, பண்பாட்டு மரபுகளோடு வாழ்ந்த படகர் சமூகத்தின் வரலாற்றை இந்நாவல் காட்சிப்படுத்துகிறது. படகர்களின் உணவு, உடை, உறைவிடம், உறவுநிலை, தொழில், நம்பிக்கைகள், வாழ்வியல் சடங்குகள், திருவிழாக்கள் முதலிய பண்பாட்டு மரபுகள் நாவலாசிரியரால் களஆய்வு மூலம் மிகவும் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. படகர் இன மக்கள் மற்ற இனமக்களான தோடர், கோத்தர், குறும்பரோடு ஒற்றுமையாக வாழ்ந்தாலும் தனி இனத்தவராக தங்கள் தனித்தன்மையை பேணிக் காப்பவராகத் திகழ்ந்தனர். இச்சமூகத்தில் பெண் என்பவள் மதிப்பிற்குரியவளாகவும், ஆடவருக்கு செல்வம்


 **Isbn Number**: 978-93-91115-54-8

சேர்க்கும் லட்சுமியாகவும் கருதப்பட்டு வந்தாள். இவ்வாறு மண்ணையும், பெண்ணையும் போற்றி வாழ்ந்த சமூகம் நவீனத்துவப் போக்கினால் மாற்றமடைந்து பகையோடு மடிந்த நிலையையும் இந்நாவல் எடுத்தியம்புகிறது. படகர் இனமக்களின் தனித்துவமான பண்பாட்டு மரபுகளையும், மாற்றங்களையும் குறிஞ்சித்தேன் நாவலின் வழி ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** ராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன் நாவல், படகர், வாழ்வியல், பண்பாட்டுக் கூறுகள், மாற்றங்கள்.

**முன்னுரை**

மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் காலமாற்றத்திற்கேற்ப அந்தந்த காலச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு பிறக்கின்றன. சங்ககாலம் முதல் இன்றைய நவீனகாலம் வரை எழுந்த இலக்கிய வகைமைகள் யாவும் மனித இனத்தின் வாழ்க்கை முறைமைகளைப் பதிவு செய்யும் ஆவணமாகவே திகழ்கின்றன. சமகால இலக்கிய வடிவங்களில் ஒன்றான நாவல் இலக்கியம் குறிப்பிட்ட இனம் சார்ந்த மக்களின் வாழ்வியலைப் பேசுவதில் முன்னிற்கின்றன. குறிப்பிட்ட இனமக்களின்

 **Isbn Number**: 978-93-91115-54-8

வாழ்வியலைப் புரிந்து கொள்வதற்கு அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள சமூகப் பண்பாட்டுக் கூறுகளை அறிந்துகொள்வதும் மிக மிக அவசியமாகிறது. அந்த வகையில் ராஜம் கிருஷ்ணன் அவர்களின் ‘குறிஞ்சித்தேன்’ நாவல் நீலகிரியில் உள்ள பூர்வீக குடியான படகர் இன மக்களின் வாழ்வியலைக் கூறுவதோடு அவர்களின் பண்பாட்டு மரபுகளையும் எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது. படகர் இனமக்கள் காலங்காலமாக கடைபிடித்துவரும் பண்பாட்டு மரபுகளையும், அதில் நவீனத்துவம் நுழைவதால் ஏற்படும் மாற்றங்களையும் எடுத்துரைக்கும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளபட்டுள்ளது.

**ராஜம்கிருஷ்ணனும் குறிஞ்சித்தேன் நாவலும்**

நீலகிரியில் வாழும் படகர் இன மக்களின் வாழ்வை கருப்பொருளாகக் கொண்டு எழுத்தாளுமைமிக்க பெண் நாவலாசிரியரான ராஜம்கிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்டது குறிஞ்சித்தேன் நாவலாகும். 1961-ல் தொடர்கதையாக வெளிவந்து பின்னர் 1963-ல் புத்தகமாக வெளியிடப்பட்டது இந்நாவல். கள ஆய்வின் மூலம் தான் பெற்ற அனுபவங்களை கதைகளாக்குவது ராஜம்கிருஷ்ணனின் தனிச்சிறப்பாகும். அத்தகைய கள ஆய்வின் மூலம் படைக்கப்படும் நாவல்களின் வாயிலாக

 **Isbn Number**: 978-93-91115-54-8

நிகழ்காலச் சமூக அவலங்களையும் சிக்கல்களையும் வெளி உலகிற்கு எடுத்துக்காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தவதே இவரது நோக்கமாகும். அந்தவகையில் ராஜம்கிருஷ்ணன் அவர்கள் குந்தா அணைக்கட்டுத் திட்டத்தில் அவரது கணவர் பொறியாளராகப் பணியாற்றியபோது அங்கு பணிபுரிந்த படகர் குடியிருப்புகளுக்குச் சென்று அவர்களது வாழ்வியலை உற்றுநோக்கியும், அவர்களுடன் கலந்து உறவாடியும் பல செய்திகளைச் சேகரித்து இந்நாவலை உருவாக்கியுள்ளார். கள ஆய்வு மூலம் செய்திகளைச் சேகரித்து எழுதுவதில் ராஜம்கிருஷ்ணன் கொண்டுள்ள ஈடுபாட்டை,

> **ஒரு நாவல் என்பது நான்கு சுவர்களுக்குள் அமர்ந்து கொண்டு வெறும் கற்பனையில் புனையப்படும் எழுத்துக்கோவைதான் என்பதில் எனக்கு முழுமையான உடன்பாடு கிடையாது. நாவல் புனைகதைதான். ஆனால் மனித வாழ்க்கையின் பல்வேறு பிரச்சனைகளிலும், நிலைகளிலும், பிரத்தியட்சங்கள் எனப்படும் உண்மை வடிவங்களைத் தரிசித்த பின்னர் அந்த அனுபவங்கள் எனது இதயவீணையில் மீட்டிவிட்ட கரங்களைக் கொண்டு, நான் இசைக்கப்புகும் புதிய வடிவையே நாவல் என்று**

 **Isbn Number**: 978-93-91115-54-8

**கருதுகிறேன். (ஆ.சிவசுப்பிரமணியன், ப.20)**

என்னும் அவரது கூற்று புலப்படுத்துகிறது.

**குறிஞ்சித்தேன் நாவலும் படகர் சமூகமும்**

ராஜம்கிருஷ்ணன் நீலகிரியில் வாழுகின்ற படகர்களின் வாழ்க்கை முறையை லிங்கையன், மாதன், கரியமல்லன் என்னும் மூவரின் குடும்பங்கள் வாயிலாக சித்தரிக்கின்றார். மாதன், லிங்கையன் இருவரும் சகோதரர்கள். மூத்தவரான மாதன் குடும்பத்தின் மீது அக்கறையில்லாதவராக குடிப்பழக்கத்திற்கு அடிமையானவராக இருக்கிறார். தம்பி லிங்கையன் அண்ணனுக்கு முற்றிலும் மாறானவராக இறைப்பற்றும், கருணையும் அன்பும் நிறைந்தவராய் தன் குடும்பத்தோடு தனது சகோதரரின் குடும்பத்தையும் பாதுகாக்கும் நற்பண்புகளைக் கொண்டவராய் திகழ்கின்றார். இவரது மகன் ஜோகியும் தந்தையின் நல்ல குணங்களை பெற்றவனாய் வளர்கிறான். லிங்கையன் கடுமையாக உழைத்ததால் அவரது குடும்பம் பொருளாதாரத்தில் சற்று மேம்பட்டு விளங்கியது. வறுமையில் வாழ்ந்த மாதனின் மனைவியும் மகன் ரங்கனும் ஜோகியின் குடும்பத்தின் மீது பொறாமையும், பகையும், வெறுப்பும் கொண்டவர்களாய் வாழ்கின்றனர். ஊரில் உள்ள பெரியவீட்டு குடும்பமாகிய கரியமல்லர் குடும்பம் எதிர்காலத்தைக் கணக்கிட்டு கல்வி வாய்ப்புகளைப்

பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறி வளமையில் செழித்தது.

மாதன், லிங்கையனின் சகோதரியின் மகள்கள் பாருவும், கிரிஜையும் ஆவர். முறைப்பெண்ணான பாருவை ரங்கனும், ஜோகியும், கரியமல்லரின் பேரனான கிருஷ்ணனும் விரும்புகின்றனர். பாருவோ கிருஷ்ணன் மேல் காதல் வயப்படுகிறாள். சூதும், வாதும் நிறைந்த ரங்கன் மீது மிகுந்த அன்பு கொண்ட லிங்கையன் பூமாதேவியான பாருவை அவனுக்கு திருமணம் செய்து வைத்தால் அவன் வாழ்வு வளமடையும் என எண்ணுகிறார். எனவே ஜோகியிடம் கூற அவனோ பாருவின் எண்ணம் அறிந்தவனாக அவள் கிருஷ்ணனுடனே சேர வேண்டும் என ஆசைப்படுகிறான்.

பெண் கொள்வதற்கான உருண்டைக்கல்லை தூக்கும் போட்டியில் ரங்கன் வெற்றிபெற லிங்கையன் வேண்டுதலுக்கு இணங்கி பாரு ரங்கனை மணக்கிறாள். ஜோகிக்கும் பாருவின் தங்கை கிரிஜைக்கும் திருமணம் நடக்கிறது. கால மாற்றம் இம்மக்களிடமும் பல மாறுதல்களை உருவாக்குகிறது. நோயினால் தாக்குண்ட லிங்கையன் இறந்துவிடுகிறார். கல்வியினால் முன்னேறிய கிருஷ்ணன் ஹட்டியில் பல மாற்றங்களைக் கொண்டு வர, ஜோகியோ ஊரின் அமைதி குலைவிற்கு கிருஷ்ணன் தான் காரணம் என தவறாகப் புரிந்துக்

 **Isbn Number**: 978-93-91115-54-8





கொண்டு அவனை வெறுக்கிறான். ஆங்கிலேயரிடம் வேலை பார்த்து வந்த ரங்கன் ருக்மணி என்ற பெண்ணை மணக்க பாருவின் பெண் பிள்ளைகளோ தொற்றுவியாதியால் மரணிக்கிறார்கள். இச்சூழலில் பல ஆண்டுகளுக்கு பிறகு கருவுற்ற கிரிஜையும் பிரசவத்தில் இறந்துவிட பாருவே ஜோகியின் குழந்தையான நஞ்சனை தன் மகனாக வளர்க்கிறாள்.

நீலகிரி மலையில் பல வளர்ச்சித் திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. பள்ளிக்காகவும், அணைக்கட்டு திட்டங்களுக்காகவும் பல விளைநிலங்கள் அரசால் கையகப்படுத்தப் படுகின்றன. அவ்வாறே மண்ணின் மீது மாறாத பற்றுக் கொண்ட ஜோகி மற்றும் பாருவின் நிலங்களும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதனால் மனமுடைந்த இருவரும் புதுமையை வெறுத்து ஊரை விட்டு விலகி நஞ்சனுடன் மூக்குமலை மாமன் வீட்டில் தஞ்சமடைகின்றனர். ஜோகியின் மகன் நஞ்சன் கிருஷ்ணனின் உதவியால் படித்து பொறியியல் வல்லுநராகி சொந்த ஊரிலேயே அணைக்கட்டு திட்டத்தில் பணியமர்த்தப்படுகிறான். ஹட்டியிலுள்ள குடும்பங்கள் பகையை மறந்து மீண்டும் ஒன்றிணைய வேண்டுமென ஆசைப்பட்ட கிருஷ்ணன் அதற்காக தன் மகள் வயிற்றுப் பேத்தியான விஜயாவை நஞ்சனுக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணுகிறான். அவரது


**Isbn Number**: 978-93-91115-54-8

எண்ணம் ஈடேறும்படியாக நஞ்சனும் விஜயாவை விரும்பி மணக்க எண்ண, பகைகொண்ட ஜோகியும், அதீத அன்பு கொண்ட பாருவும் எதிர்க்கின்றனர். நிலம் இழந்தோரை ஒன்றிணைத்து அணைத்திட்ட தொழிலாளருடன் இணைந்து ரங்கன் நடத்திய போராட்டத்தில் அவன் குண்டடிபட்டு இறக்க, ரங்கனால் ஊரில் வளர்ந்த பகை முடிவுக்கு வருகிறது. இழந்த விளைநிலத்திற்கு மாற்றாக கிருஷ்ணனின் கறுப்பு மண் கிடைத்த மகிழ்ச்சியும், நஞ்சன் தங்களை விட்டு பிரியமாட்டான் என்ற நம்பிக்கையும் ஜோகிக்கும், பாருவுக்கும் பகையை மறக்க காரணமாக அமைகிறது. அவ்வாறே மீண்டும் பிரிவு எழாதபடி கிருஷ்ணனும் அக்குடும்பங்களை திருமணபந்தத்தால் இணைத்து விடுகிறார். இருளில் மூழ்கி கிடந்த மரகத மலை ஹட்டி மின்விளக்குகளால் பிரகாசிக்க நாவல் நிறைவடைகிறது.

**பண்பாட்டு மரபுகள்**

பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. அவனை பண்படுத்துவது, பக்குவப்படுத்துவது எனவும் கொள்ளலாம். பண்பாடு என்பது மக்கள் தலைமுறை தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தைமுறைகளும் பழக்கங்களும் மரபுகளும் சேர்ந்த தொகுதியே என மானிடவியலாளர்கள்

 **Isbn Number**: 978-93-91115-54-8

கருதுகின்றனர். பண்பாடு என்பதற்கு புகழ்பெற்ற மானிடவியல் அறிஞர் எட்வர்ட் பர்னட் டைவர் அவர்கள்,

> **பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும். (பக்தவத்சல பாரதி, ப.152)**

என வரையறை கூறுகிறார். பக்தவத்சல பாரதி அவர்களோ,

> **உலகம் முழுவதும் எண்ணிலடங்கா வகைகளில் பரவி வாழும் சமுதாயங்களின் பண்பாட்டைக் காலப் பரிமாணங்களுடன் ஆராயும் மானிடவியல் பிரிவே பண்பாட்டு மானிடவியலாகும். (பக்தவத்சல பாரதி, ப.110)**

எனக் கூறுகிறார். பண்பாடு குறித்து கலித்தொகையும், "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" (கலி.தொ.133) என்று விளக்கம் கூறுகிறது.

ஒரு குறிப்பிட்ட இனமக்களின் வாழ்வியலைப் புரிந்து கொள்வதற்கு அவர்களின் சமூகப் பண்பாடு மரபுகளை அறிந்து கொள்வது அவசியமாகிறது. அந்தவகையில் குறிஞ்சித்தேன் நாவல் படகர் இனமக்களின் வாழ்வியல் பழக்கவழக்கங்கள்,


**Isbn Number**: 978-93-91115-54-8

நம்பிக்கைகள், சடங்குகள் முதலிய பண்பாட்டு மரபுகளை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

**உணவு**

படகர் இனமக்களின் முக்கிய உணவாக பசுவிலிருந்து பெறப்படும் பால், தயிர், மோர், வெண்ணெய் ஆகியவையும் சாமை, கேழ்வரகு, கிழங்கு வகைகளும் இருக்கின்றன. சாமையால் சமைத்த உணவில் நெய் ஊற்றி உண்ணும் வழக்கம் இவர்களிடம் உள்ளது. அவ்வாறே கேழ்வரகு களிக்கு பக்க உணவாக மொச்சப்பயிரோடு புளி சேர்க்காத குழம்பினை விரும்பி உண்ணுகின்றனர். இதனை நாவலில் இடம்பெறும்,

> **மாதி வட்டிலைக் கொண்டு வந்து வைத்து சாமைச் சோறும் மணக்க மணக்க நெய்யுமாக அமுது படைத்தாள். மொச்சைப் பருப்பின் புளியில்லாத குழம்பை ஊற்றினாள். சோற்றைக்கலந்து லிங்கையா குழந்தைகளுக்கெல்லாம் கொடுத்தான். (ராஜம்கிருஷ்ணன், ப.25)**

என்னும் வரிகளால் அறியலாம். மேலும் சைவ உணவை மட்டுமே இவர்கள் உட்கொள்கின்றனர். அசைவ உணவு உண்ணும் வழக்கம் இவர்களிடம் காணப்படவில்லை. அவ்வாறு அசைவ உணவு உண்ணுபவர்களை இழிவானவர்களாக கருதும் நிலையினை, “துரையும் நம்மைப்போல் மனிதன் தான் சொல்லப்போனால்


**Isbn Number**: 978-93-91115-54-8

இழிகுலத்தோர்போல் ஆடும் மாடும் தின்பவன்'' (ராஜம்கிருஷ்ணன்,ப.87) "டேய் நீ என்ன நினைத்தாய்?திருட்டுப் பயலே. உன்னை இந்தக் கையால் பால் ஊற்றி வளர்த்தேன். என்னை எப்படியடா மோசம் செய்தாய்? துரைமாரின் மேசையா துடைக்கிறாய்? ஆடு மாடு தின்னும் ஹொலையனே! (சண்டாளர்) போ, போடா, போ'' (ராஜம்கிருஷ்ணன், ப.98) ஆகிய நாவலின் கூற்றுக்களால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

அசைவம் உண்பவர்கள் 'ஹொலையர்' என்னும் கீழ் இனத்தவருடன் ஒப்பிடப்படுவதை நாவலின் இப்பகுதி காட்டுகிறது. அதுமட்டுமன்று தன் இல்லம் வரும் விருந்தினர்களுக்கு மோர், தேநீர் கொடுத்து உபசரிக்கும் வழக்கமும் இவர்களிடம் இருந்ததை இந்நாவல் சுட்டுகிறது.

**ஆடை அணிகலன்கள்**

மனிதன் பொருளாதாரத்தில் உயர்ந்து தாழ்ந்து என எத்தகைய நிலையில் இருந்தாலும் அவனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகிய இம்மூன்றும் மிக மிக அடிப்படையான ஒன்றாகவே இருக்கின்றது. படகர் இனப் பெண்கள் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் குறித்த செய்திகள் நாவலாசிரியரால் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. கிருஷ்ணன் சிறுவயதில் பார்த்த தன் முறைப்பெண்ணை


**Isbn Number**: 978-93-91115-54-8

மனதில் எண்ணி அவளது தோற்றத்தை கற்பனை செய்யுமிடத்தில்,

> **அவர்கள் வழக்கப்படி, மார்புக்கு மேல் வெள்ளை முண்டுத்தான் உடுத்திருப்பாள். இளவேய்கள் போல் தோள்கள் தெரியும். உருண்டையான கைகளில் வெள்ளிக்கடகங்களும், தளிர்விரல்களில் மோதிரங்களும் அணிந்திருப்பாள். உச்சந்தலையை மூடி, வெளுப்பாக அவன் கட்டிக்கொண்டிருக்கும் வட்டுக்குக் கீழே அடங்காத கருங்குழற்கற்றை, வட்ட மதியன்ன முகத்தின் அழகுக்கு அழகு செய்யும்" (ராஜம்கிருஷ்ணன், ப.69)**

என்று படகர் இனப் பெண்களின் ஆடை, அணிகலன்கள் பற்றிய தகவல்கள் நாவலில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

**உறைவிடம்**

சங்ககாலம் முதல் நவீனகாலம் வரையிலான கால மாற்றத்திலும் மக்கள் தங்களது அடிப்படை தேவைகளில் ஒன்றான இருப்பிடத்தை தாம் வாழும் நிலத்தின் தட்பவெட்ப நிலைக்கு ஏற்பவும், பொருளாதாரத்திற்கு ஏற்பவுமே அமைத்துக் கொண்டுள்ளனர். மலையில் வாழும் மக்கள் தங்கள் வீடுகளை மலையுச்சியிலோ அல்லது மலைச் சரிவிலோ அமைத்திருப்பர். அவ்வாறே


**Isbn Number**: 978-93-91115-54-8

படகர் இனத்தனவரின் வீடுகளும் மலையுச்சியிலும், சரிவிலும் அமைக்கப்பட்டிருந்தன. இவர்கள் தாங்கள் வாழும் கிராமத்தை ‘ஹட்டி’ என்று அழைக்கின்றனர். இதற்கு குடியிருப்புப் பகுதி என்று பொருள். நாவலில் வரும் படகர்கள் வாழும் பகுதி ‘மரகதமலை ஹட்டி’ ஆகும். இங்குள்ள வீடுகள் தாழ்ந்த குறுகிய வாயில்களை உடையனவாகக் காணப்படுகின்றன. வீடுகள் அனைத்தும் ஒன்று போல் வரிசையாக அமைந்துள்ளன. மேலும், ஒகமனை’ என்னும் உட்புறத்தையும், ‘இதமனை’ என்னும் வெளிப்புறத்தையும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. வெளிமனை முன்புறம் சிறுவராந்தாவைக் கொண்டதாகவும், உள்மனை பூசை அறை, தீபமாடம், சமயலறை ஆகியவற்றைக் கொண்டதாகவும் உள்ளன.

> **உள்மனையின் நடுவே, சமையலறை வாயிலில் சுவர்த்தண்டில் எல்லா இடங்களுக்கும் வெளிச்சம் தெரியும் வண்ணம் தீபமடம் அமைக்கப்பெற்றிருக்கும். மேலே மூங்கில்களால் ஆன சேமிப்பும் பரண்களும் உண்டு.” (ராஜம்கிருஷ்ணன், ப.21)**

என்ற நாவல் வரிகளின் வழியாக தெரிந்து கொள்ளலாம்.

**உறவுநிலை**

மனித உணர்வுகள் எவ்வளவு நுட்பமானவையோ


**Isbn Number**: 978-93-91115-54-8

அதேபோன்று மனித உறவுகளும் மிக மிக நுட்பமானவை. உறவுநிலை குறித்து பக்தவத்சல பாரதி அவர்கள், “மனித குலத்தைப் பற்றிய மானிடவியலின் கண்டுபிடிப்புகளுள் சமுதாயத்தின் கட்டமைப்பிற்குள் செயல்முறை, உறவுமுறை பற்றிய விதிகளைக் கண்டுபிடித்ததும் ஒன்றாகும்”. (பக்தவத்சலபாரதி,ப.417) என்று குறிப்பிடுகிறார். உறவுகள் உணர்வின் ஆளுமையைக் கொண்டவை. உறவு நிலைகளில் உணர்வு ரீதியிலான தூண்டுதல்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இனக்குழுச் சமுதாய அமைப்பில் உறவுமுறை என்பது இயல்பான ஒன்றாகும். உறவுநிலையினை குடும்ப உறவு, சமூக உறவு என இரண்டாக வகைப்படுத்தலாம். ஓர் ஆணும், பெண்ணும் மணஉறவில் இணையும் போது குடும்பஉறவு தோன்றுகிறது. இந்த குடும்பங்கள் ஒன்றிணைந்து வாழும் பகுதியில் ஒரே இனத்திற்குள்ளேயோ அல்லது வேறுபட்ட இனத்தினருக்குள்ளேயோ சமூக உறவு பிறக்கின்றது.

படகர் இனமக்கள் குடும்ப உறவுகளுக்கும் சமூக உறவுகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பவர்கள் மூத்த தலைமுறையினரான லிங்கையன் தனது மகனான ஜோகியைப் போலவே தன் அண்ணன் பிள்ளைகளிடமும் வேற்றுமை பார்க்காமல் அன்பு செலுத்தினார். அதிலும் ரங்கனை தனது மூத்த மகனாகவே பாவித்தார். வறுமையில் பரிதவித்த மாதன் குடும்பத்திற்கும் சேர்த்து


Isbn Number: 978-93-91115-54-8

உழைத்தார். தன் உழைப்பால் வந்த விளைச்சலில் அவர்களுக்கும் உரிமையுண்டு என்று எண்ணினார். இத்தகைய குடும்ப உறவுநிலையினை,

> **எல்லோரும் சொல்வதைப் போல் நீங்கள் பரிவு காட்டுவதாலேயே உங்கள் அண்ணன் குடும்பம் தழைத்துப் பிழைக்காமல் போகிறது. நீங்கள் முந்தி முந்தித் தானியமாய் அளக்கிறீர்கள்;பாலாய்ச் சாய்க்கிறீர்கள். (ராஜம்கிருஷ்ணன், ப.22)**

என்னும் மாதியின் கூற்றிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு இனமும் தங்களுக்குள்ளோ அல்லது, பிற இனத்தவருடனோ பல்வேறு காரணங்களால் வேறுபட்டு நின்றாலும் பஞ்சம், பட்டினி, வறுமை, இயற்கை சீற்றங்கள் போன்ற துன்பங்கள் நேரிடும் போது அனைத்து வேறுபாடுகளையும் களைந்து சமூக உறவில் ஒன்றிணைந்து நிற்பதைக் காணமுடிகிறது. அவ்வாறே படகர் இன மக்களும் இருப்பதை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு ஒருமித்து வாழ்ந்த செய்தி நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தன் இனத்தவரோடு மட்டுமின்றி கோத்தர், குறும்பர் போன்ற பிற இனத்தவருடனும் படகர்கள் நல்லுறவு கொண்டு வாழ்ந்ததை குறிஞ்சித்தேன் நாவல் இனம் காட்டுகிறது.

 **Isbn Number**: 978-93-91115-54-8

## தொழில்

மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்ய தான் வாழும் நிலத்திற்கேற்றவாறு தொழிலையும் நிர்ணயம் செய்து கொண்டான். அன்று முதல் இன்று வரையிலான மனித வாழ்க்கை நிலையில் மண் சார்ந்த தொழில் பயன்பாட்டு மரபையே காணமுடிகிறது. மலையை நம்பி வாழும் படகர்களின் முக்கியத் தொழிலாக விவசாயம் உள்ளது. தங்களது விளைநிலங்களில் சாமை, கேழ்வரகு, கோதுமை, உருளைக்கிழங்கு, முள்ளங்கி, முட்டைக்கோஸ் ஆகியவற்றை அதிகமாகப் பயிரிடுகின்றனர். ஆண், பெண் பாகுபாடின்றி இருவருமே நிலத்தில் பாடுபட்டு உழைக்கின்றனர். அதிலும் பாரு மண்ணை தன் உயிராக நேசித்தாள்.

> **மண்ணைத் தவிர உலகில் வேறு மகிழ்ச்சி தரக்கூடிய இன்பம் இரண்டு மக்கள் தாமே? மண் உயிர் கொடுக்கிறது, உரம் கொடுக்கிறது, உணவு கொடுக்கிறது, ஒரு நாள் அந்த மண்தான் உயிர்களையும் தன்னுள் அடக்கிக் கொள்கிறது.” (ராஜம்கிருஷ்ணன், ப.154)**

என்னும் நாவலின் வரிகள் ஆண், பெண் இருவருமே நிலத்தில் உழைப்பதையும், மண்ணை உயிராய் நேசிப்பதையும் உணர்த்துவதாக அமைகிறது.


**Isbn Number**: 978-93-91115-54-8

படகர் இனத்தவர் தாங்கள் விளைவித்தவற்றை அறுவடை செய்து தெய்வத்திற்கு முதலில் படைத்த பின்பே அதனை உண்ணும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர்.

**நம்பிக்கைகள்**

ஆதிகால மனிதன் மழை, வெயில், இடி, மின்னல் போன்ற இயற்கை நிகழ்வுகளின் மீது கொண்ட அச்சமே மனித வாழ்வில் நம்பிக்கை இடம்பெற காரணமாக அமைந்தது. இந்த நம்பிக்கைகள் எவ்வித விளக்கமும், காரணமுமின்றியே ஒவ்வொரு இனச் சமூகத்திலும் வழி வழியாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. படகர் இன மக்கள் மிகுந்த கடவுள் நம்பிக்கை கொண்டவராக விளங்கினர். மழையைக் கொடுப்பதும், மண்ணைக் காப்பதும் கடவுள்தான் என்னும் நம்பிக்கைக் கொண்டவர்களாய் சூரியனை ஈசனின் வடிவாக எண்ணி வணங்கினர். இரவு நேரத்தில் வீட்டில் விளக்கு ஏற்றவில்லை என்றாலோ, இறைவனைப் பழித்துப் பேசினாலோ அவர்களது நிலம் விளையாது, மாடு கறக்காது என்ற நம்பிக்கையும் இவர்களிடத்தில் இருந்ததை,

> **இரவில் சூரியன் இல்லாதபோது வீட்டில் அவர்களுக்கு அந்தத் தெய்வத்தின் சின்னமாக விளங்குவது அந்த விளக்கு. வீட்டில் அவ்விளக்கு**


**Isbn Number**: 978-93-91115-54-8

**இல்லாவிட்டால், நிலம் விளையாது, மாடு மடி சுரக்காது என்பதையெல்லாம் ஜோகி அறிவான் (ராஜம்கிருஷ்ணன், ப.3)**

என்ற வரிகள் விளக்கிக் காட்டுகின்றன.

படகர் இன மக்கள் தெய்வத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பது போலவே மந்திரத்தின் மீதும் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். தங்களுக்கு வரும் தலைவலி, காய்ச்சல் போன்ற நோய்களை மந்திரத்தால் சரிசெய்துவிட முடியும் என நம்புகின்றனர். மேலும் இத்தகைய நோய்களுக்கெல்லாம் குறும்பர்களின் ஏவல் தான் காரணம் என்றும், அவர்களுக்கு காணிக்கைக் கொடுத்தால் சரிசெய்து விடுவார்கள் என்றும் நம்புகின்றனர். குறிஞ்சித்தேன் நாவலில் ஜோகி தன் தந்தைக்கு குளிர்காய்ச்சல் கண்டபோது குறும்பர்களை சென்று பார்க்க வேண்டுமென்று எண்ணியவனாய் பக்கத்து வீட்டு பெள்ளி சொன்னதை நினைத்துப் பார்க்கிறான். இதனை,

**அண்டை வீட்டுப் பெள்ளி, அன்று ஜோகியிடம், அம்மாதிரியான ஏவல் அவனுடைய அத்தை மகனுக்கு வந்ததாகவும், குறும்பர் தலைவனிடம் சென்று பேசிக் காணிக்கைகள் வைத்த பிறகு காய்ச்சல் போய் விட்டதாகவும் கூறியிருந்தான்" (ராஜம்கிருஷ்ணன், ப.61)**

 **Isbn Number**: 978-93-91115-54-8

என்ற கூற்றால் அறியலாம். அவ்வாறே தந்தையின் காய்ச்சல் தீர குறும்பர்களைக் கண்டு வேண்டுகிறான். இவ்வாறு படகர் இனத்தவர் தெய்வத்தின் மீதும், மந்திரத்தின் மீதும் கொண்டிருந்த நம்பிக்கையை குறிஞ்சித்தேன் நாவல் வெளிக்காட்டுகிறது.

**வாழ்வியல் சடங்குகள்**

மனிதனின் நம்பிக்கை வெளிப்பாட்டினால் நிகழ்பவையே சடங்கு முறைகளாகும். இவை மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையான ஒவ்வொரு சூழலிலும் நிகழ்கின்றன. படகர் இனத்தில் பிறப்பு, திருமணம், இறப்பு என ஒவ்வொரு நிகழ்விலுமே பல சடங்கு முறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. மானிட வாழ்வில் எல்லா செல்வங்களைவிடவும் பெருமைமிகு செல்வமாகப் போற்றப்படுவது மக்கட் செல்வமாகும். படகர் சமூகத்தில் குழந்தைப் பிறந்தவுடன் 'சேனை தொடுதல்' எனும் சடங்கு நடத்தப்படுகிறது. இச்சடங்கின் போது பெரியவர்களை அழைத்து குழந்தையின் நாவில் இனிப்பு கலந்த பாலைத் தொட்டு வைத்து வாழ்த்துவது இவர்கள் வழக்கமாகும்.

படகர் இனமக்களின் முக்கியமான சடங்குகளில் ஒன்றாக அமைவது திருமணச்சடங்காகும். திருமணம் முடிந்ததும் மணப்பெண் மணமகன் வீட்டிற்கு அழைத்து வரப்படுவாள். மணமகனின் வீட்டு வாயிலில் பெண்ணை

 **Isbn Number**: 978-93-91115-54-8

நிற்க வைத்து அவள் கைகளில் மூன்று முறை நீர் வார்க்கப்படுகின்றது. பின்னர் அவளை வீட்டிற்குள் அழைத்துச் சென்று புதுப்பாலுடன் சாமை சோறும் பரிமாறுகின்றனர். அதனைத் தொடர்ந்து கோத்தர்களின் இசை முழக்கத்துடன் இச்சடங்கு நிறைவுபெறுகிறது. படகர்களின் இத்தகைய திருமணச் சடங்கினை பாருவின் திருமணத்தில் காணமுடிகிறது.

> **செம்மண் தீட்டிப் புதுப்பித்த மனைவாயிலிலேயே மணப்பெண் வந்து நின்றதும், மாதி வீட்டின் முதியவள், மாமி என்ற ஸ்தானத்தில் நின்று, குடத்திலிருந்து ஒழுகும் நீர் போல் வழிவழி வரும் இந்தக் குடும்ப வளர்ச்சியை ஏற்றுக்கொள்வாயாக! என்று அவளிடம் ஒப்பிப்பதே போல், நீரைக் குடத்தினின்றும் மணப்பெண் கைகளில் மும்முறை வார்த்தாள். (ராஜம்கிருஷ்ணன், ப.130)**

மணமகளுக்கான விருந்து படைத்தபின் அவள் குடத்துடன் அருவிக்குச் சென்று குடம் நிரம்ப அருவி நீரை எடுத்துக் கொண்டு மீண்டும் மணமகன் இல்லம் புகுவாள். இத்தகைய சடங்குமுறைகள் நீரைப் புனிதமாகக் கருதும் இவர்களது பண்பாட்டு மரபினை வெளிக்காட்டுவதாக அமைகிறது.


**Isbn Number**: 978-93-91115-54-8

படகர்களின் இறப்புச் சடங்கில் அதிகமான சடங்குமுறைகள் காணப்படுகின்றன. ஒருவர் இறந்துவிட்டால் அவரை அடக்கம் செய்யும் நாளன்று இறந்தவரின் உடலை நீரினால் சுத்தம் செய்து புதிய ஆடை அணிவிக்கப்படுகிறது. இறந்தவர் விரும்பி உண்கின்ற உணவும், அவர் பயன்படுத்திய கருவிகளும் அவரோடு வைக்கப்படுகிறது. படகர் இனத்தில் இறந்தவருக்கான ஈமச்சடங்குகள் செவ்வாய்க்கிழமை நடத்தப்படுவதில்லை. இறப்புச் சடங்கிற்கு வரும் உறவினர்களில் பெரியவர்கள் இறந்தவரின் தலைமாட்டில் நின்று மணியடித்து வணங்குவதும், சிறியவர்கள் காலைத் தொட்டு வணங்குவதும் வழக்கமாக உள்ளது. மேலும், கோத்தரின் இசைமுழங்க இறந்தவரை ஏற்றிச் செல்லும் ரதத்தைச் சுற்றி மக்கள் நடனமாடிக்கொண்டே செல்வர். இத்தகைய சடங்குகளில் பிற இனத்தவரான தொரியர், கோத்தர், குறும்பர் முதலியோரும் கலந்து கொள்வது அவர்களது சமூக பண்பாட்டை காட்டுவதாக அமைந்துள்ளது.

**திருவிழாக்கள்**

மக்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தவும், தங்கள் உழைப்பின் சோர்வினைப் போக்கிக் கொள்ளவும், உறவுகளை ஒன்றிணைத்து இன்பமுறவும் விழாக்களை கொண்டாடுகின்றனர். இவ்விழாக்கள் ஒரு குறிப்பிட்ட

 **Isbn Number**: 978-93-91115-54-8

இனக்குழுச் சமூகத்தின் பண்பாட்டினை இனங்காணுவதற்கு வாயிலாக அமைகிறது. படகர் இனச் சமூகத்தில் கெண்ட ஹப்பா, தெவ்வ ஹப்பா, சகலாத்தி ஹப்பா ஆகிய மூன்று விழாக்கள் கொண்டாடப்படுவதாக குறிஞ்சித்தேன் நாவலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

“கெண்டஹப்பா’என்பது மாசி மாதத்தில் மாதலிங்கேசுவரருக்கு கொண்டாடப்படும் விழாவாகும். மண்ணையும், நீரையும், காற்றையும் தந்து வற்றாத வளமைக்கு வழிகாட்டிய இறைவனைக் கொண்டாடும் பொருட்டு இவ்விழா நடத்தப்படுகிறது. இவ்விழா பற்றிய செய்தி நாவலில்,

> **கங்கைவார்சடையில் திங்கள் அணிந்த மங்கை பாகனை மனத்திருத்தி ஆண்டு சிறக்க, மண்ணில் இட்ட விதை மண்டிப் பயன்தர, கன்று காலிகள் பல்கிப் பெருக, பாலும் தேனும் பஞ்சமின்றிப் பொங்கிப் பொழிய, செய்யும் முயற்சிகளெல்லாம் கைகூட வேண்டி, அவர்கள் கொண்டாடும் பெருநாள் அன்று.கீழ்மலை மாதலிங்கேசுவரர் சந்நிதிக்குமுன் அழல் வளர்த்து, ஹர ஹர ஹர என்ற கோஷம் மலைமுகடுகள் எங்கும் எதிரொலிக்க, அடியவர் இறங்கி நடப்பதைக் கண்டு, சிந்தை உருகிப் பக்தி பரவசத்தால் பாடி**


**Isbn Number**: 978-93-91115-54-8

**ஆடி மகிழும் புனித நாள் அன்று.**
**(ராஜம்கிருஷ்ணன், ப.131-132)**

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மக்கள் மன்றிலாடும் எம்பிரானை மட்டுமின்றி, அவர்களின் பத்தினித் தெய்வமான ‘ஹத்தையம்மனின்’ புகழையும் பாடிய கீதங்கள் அந்த மலைபிராந்தியம் முழுவதும் காற்றில் தவழ்ந்து ஒலிபரப்பியதாக குறிஞ்சித்தேன் நாவல் சுட்டுகிறது.

‘தெய்வ ஹப்பா’ என்பது விளைந்த கதிர்களை அறுவடை செய்து இறைவனுக்குப் படைத்து நன்றி செலுத்தும் விதமாக படகர்கள் கொண்டாடும் விழாவாகும். இவ்விழா வைகாசி அல்லது ஆனி மாதத்தில் திங்கட்கிழமையன்று ஊர்மக்களால் கொண்டாடப் படுகிறது.

ஐப்பசி மாதத்தில் படகர்களால் கொண்டாடப்படுவது ‘சகலாத்தி ஹப்பா’ விழாவாகும். இவ்விழா பயிரும், குடியும் வளமாக இருக்க வேண்டுமென்றும், தீயசக்திகளை அமைதிபடுத்த வேண்டுமென்றும் நிகழ்த்தப்படுகிறது. விழாவிற்காக படகர் இனப்பெண்கள் வீடுகளை மெழுகிப் புதுப்பித்து, மாலை நேரத்தில் வீட்டின் முற்றத்தில் கோலங்களை வரைந்து அழகுபடுத்துவர். பின்னர் கோதுமை தோசையை சுட்டு அடுக்கி வைத்து அதன் நடுவில்


**Isbn Number**: 978-93-91115-54-8

நெய்யில் நனைத்த திரியை கொளுத்தி வழிபாடு செய்கின்றனர். இவ்வழிபாடு வயல்வெளிகளில் வைத்து நடைபெறுகிறது.

**பண்பாட்டு மாற்றங்கள்**

இன்றைய நவீனகாலம், உலகின் அனைத்துப் பண்பாடுகளுமே விரைந்து மாற்றம் பெற்று வரும் காலமாகும். மாற்றத்திற்கு உட்படாத பண்பாடே இல்லை எனலாம். "பண்பாடு என்பது நீரோட்டம் போன்றதே. இதன் இயக்கத்தில் தொடர்ச்சியான மாற்றங்கள் நிகழ்கின்றன. கற்றுணர்ந்த நடத்தை முறையின் (Learned behavior) தொகுப்பாகப் பண்பாடு நிகழ்வதால் மக்கள் புதியனவற்றைக் கற்றுக் கொள்ளும் போதெல்லாம் அவர்களின் பண்பாடும் மாற்றம் பெறுகிறது". (பக்தவத்சலபாரதி, ப.570) என பண்பாட்டு மாற்றத்திற்கான காரணத்தை விளக்குகிறார் பக்தவத்சலபாரதி அவர்கள். படகர் இனச்சமூகத்திலும் இளைய தலைமுறையில் அவர்கள் கற்ற கல்வியும், அதனால் ஏற்பட்ட அறிவு வளர்ச்சியும், ஆங்கிலேயர் ஆட்சியும் பல பண்பாட்டு மாற்றங்கள் ஏற்பட காரணமாக அமைகிறது.

படகர்கள் நிலத்தில் சாமை, கோதுமை, கேழ்வரகு, கிழங்கு ஆகியவற்றை பயிரிட்டு வாழ்ந்த காலம் மாறி தேயிலைப் பயிர் செய்யும் முறை அறிமுகமான பின்பு

 **Isbn Number**: 978-93-91115-54-8

பணப்பயிரான தேயிலையையும், காபியையும் பயிரிடவே மக்கள் ஆசைப்பட்டனர்.

> **சாமையும் ராகியும் கிழங்கும் தவிர, மண்ணில் விளைவித்துப் பணத்தின் ருசி அறிந்திராத ஹட்டி மக்களில் பலரும், தேயிலை போட வேண்டும், பணம் குவிக்க வேண்டும் என்ற இலட்சியத்துக்காகவே மண்ணில் உழைக்கத் தொடங்கி விட்டனர். (ராஜம்கிருஷ்ணன்,ப.142)**

இவ்வாறு தேயிலைப் பயிரிட்டு பொருளாதாரம் வளர்ந்ததும் 'தன் மண்ணில் தானே பாடுபடுவது' என்ற பண்பாடு மாறி சொந்த மண்ணில் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர்களை வைத்து உழைத்த நிலையும் கரியமல்லரின் குடும்பம் வாயிலாக நாவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கல்வியும், நாகரிக வளர்ச்சியும் இம்மக்களின் ஆடை, அணிகலன்களிலும் பல மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. படகர் இன மக்கள் கல்வி, பொருளாதாரம், நாகரிகத்தில் வளர்ச்சி கண்டபின் அவர்களது உணவு, உடை, தொழில், நம்பிக்கை, சடங்குகள் முதலிய பண்பாட்டு மரபுகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டதை குறிஞ்சித்தேன் நாவல் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

**முடிவுரை**

 **Isbn Number**: 978-93-91115-54-8

இலக்கியங்கள் யாவும் மனிதன் தன்னை பண்படுத்துவதற்கும், சமூக இயைபுடையவனாக மாறுவதற்கும் உரிய வழிவகைகளை எடுத்துரைப்பவையாகவே அமைகின்றன. வெவ்வேறு பாடுபொருளைக் கொண்ட எவ்வகை இலக்கியமாக இருந்தாலும் அதன் அடி நாதமாக அமைவது சமூகமே ஆகும். அதிலும் குறிப்பிட்ட இனக்குழுச் சார்ந்த வாழ்வியலை நாவல் இலக்கியமே அதிகமாக பதிவு செய்கிறது. குறிஞ்சித்தேன் நாவல் காட்டும் படகர் சமூகம் நீலகரியில் வாழும் பூர்வீகக் குடிகளில் நவீனக்கல்வி பெற்று, பொருளாதாரத்திலும் அரசியலிலும் முன்னேறிய குடிகளாகக் காட்சியளிக்கின்றனர். இந்நாவலில் படகர்களின் பழக்கவழக்கங்கள், வழிபாடு, நம்பிக்கைகள், சடங்குகள் முதலிய பண்பாட்டுக் கூறுகளை மட்டுமின்றி குந்தா அணைக்கட்டு உருவாக்கத்தால் அம்மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் பதிவு செய்திருக்கிறார் நாவலாசிரியர்.சமூக மாறுதல்களுக்குத் தம்மை ஆட்படுத்திக் கொள்ளாதிருந்தபடகர் சமூகம் வர்கக உருவாக்கத்தால் சமூக மாறுதல்களுக்கு உள்ளான நிலையையும் இந்நாவல் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

[1] சக்திவேல்.சு. *நாட்டுப்புறவியல்*, மணிவாசகர்

 **Isbn Number**: 978-93-91115-54-8

பதிப்பகம், சென்னை, 2011.

[2] சிவசுப்பிரமணியன்.ஆ. *இனவரைவியலும் தமிழ் நாவலும்*, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2014.

[3] பக்தவத்சலபாரதி. *பண்பாட்டு மானிடவியல்*, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2016.

[4] பாக்யமேரி, *வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு*, பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2011.

[5] மாணிக்கனார். வ.சுப. *திருக்குறள் தெளிவுரை*, பாலா கிராபிக்ஸ், சென்னை, 2007.

[6] ராஜம்கிருஷ்ணன். *குறிஞ்சித்தேன்*, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2011.

[7] விசுவநாதன்.அ., (உ.ஆ) *கலித்தொகை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

 **Isbn Number**: 978-93-91115-54-8

# Individuality of Arulmozhivarman in "Ponniyin Selvan"

**Dr D. Maheswari**, Editor, IJTLLS, Virudhunagar, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120**
**DOI: 10.5281/zenodo.5533993**

## Abstract

*"Ponniyin Selvan" is one of the very famous classics in Tamil Literature. It portrays the life and success of Arulmozhivarman, later called Raja Raja Cholan in Tamil history. He is the epitome of many virtuous qualities. He is brave, romantic, fit for the throne but not zealous or jealous in nature. He is a poised young man with lots of aspirations and deals with every aspect of life in a very careful and intellectual manner. All people admire him and the enemies even respect him and praise him for his chivalric quality on the enemy's land. All of the first his sagacious nature and decisions stumble everyone with wonder and becomes an inspiration to all. Hence, the chapter discusses the individualistic quality of Arulmozhivarman.*

**Keywords:** "Ponniyin Selvan" Arulmozhivarman, Valour and love, Throne, Sagaciousness

## References

[1] Rasigamani, T.K.C. Ramakadai. Ayothi Kaikeci Soolvinai, http://surl.li/afaew, 8.9.21, 12.10 pm.

[2] Kalki. Ponniun Selvan. Sri Hindu Publications, Chennai-05.

[3] Sri Kumarakuruparar. Muthukumara Swamy Pillaitamil. Muthaparuvam, Saradha Pathippagam, Chennai.

[4] T.Mahalakshmi (Author of Article), S.Kiruttinamoorthy (Ed), *Ikkala Ulakirku Thirukkural Volume-3*, Ulaga Tamilaraichi Niruvanam, Chennai, 2004.

[5] Vellai Varanam.T.M. Puraporul Venbamalai. Thirupananthal mada Veliutu, Tanjavur, 1967.


**Isbn Number**: 978-93-91115-54-8





# பொன்னியின் செல்வனில் அருள்மொழிவர்மனின் தனித்தன்மைகள்

**முனைவர் த.மகேஸ்வரி,** பதிப்பாசிரியர், தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120**
**DOI: 10.5281/zenodo.5533993**

## ஆய்வு சுருக்கம்

"பொன்னியின் செல்வன்" தமிழ் இலக்கியத்தில் மிகவும் பிரபலமான வரலாற்றுப் புதினமாகும். இது தமிழ் வரலாற்றில் இராஜராஜ சோழன் என்று அழைக்கப்படும் அருள்மொழிவர்மனின் வாழ்க்கை மற்றும் வெற்றியை சித்தரிக்கிறது. அவர் பல தெளிவான குணங்களின் எடுத்துக்காட்டு. அவர் தைரியமானவர், காதல் நிறைந்தவர், சிம்மாசனத்திற்கு ஏற்றவர், பொறாமையற்றவர். வாழ்க்கையில் மிகுந்த கவனத்துடனும் அறிவார்ந்த முறையிலும் அனைத்து பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் ஆர்வமுள்ள இளைஞர். எல்லா மக்களும் அவரைப் போற்றுகிறார்கள், எதிரிகள் கூட அவரை மதிக்கிறார்கள்; வீரத்தைப் பாராட்டுகிறார்கள். அவருடைய புத்திசாலித்தனமான இயல்பும் முடிவுகளும் அனைவரையும் ஆச்சரியத்தில் தடுமாறச் செய்து அனைவருக்கும் உத்வேகத்தை

 **Isbn Number**: 978-93-91115-54-8

அளிக்கிறது. அருள்மொழிவர்மனின் தனித்துவத்தை ஆராய்வதே இப்புத்தகப்பகுதியின் ஆய்வு நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்:** பொன்னியின் செல்வன், அருள்மொழிவர்மன், வீரமும் அன்பும், சிங்காசனம், தியாகசிகரம்,

## முன்னுரை

*பொன்னியின் செல்வன்* அமரர் கல்கி எழுதிய புகழ் பெற்ற தமிழ் வரலாற்றுப் புதினமாகும். 1950 - 1955 ஆண்டு வரை கல்கி வார இதழில் தொடர்கதையாக வெளியிடப்பட்டது. இப்புதினத்துக்குக் கிடைத்த மக்கள் ஆதரவு காரணமாகத் தொடர்ந்து, பல்வேறு காலகட்டங்களில் *பொன்னியின் செல்வன்* புதினத்தைக் கல்கி இதழ் தொடராக வெளியிட்டது. பொன்னியின் செல்வன் தனி நூலாகவும் வெளியிடப்பட்டுப் பல பதிப்புக்களைக் கண்டுள்ளது.

கி.பி. 1000ம் ஆண்டு சிறப்புற்று திகழ்ந்த சோழப் பேரரசை அடிப்படையாகக் கொண்டு இந்த வரலாற்றுப் புதினம் எழுதப்பட்டிருக்கிறது. சோழர்களின் பொற்கால ஆட்சியைப் பற்றி சரித்திர நூல்களில் இருந்து தெரிந்துகொண்டதைக் காட்டிலும் பொன்னியின் செல்வனில் இருந்தே பெரும்பாலான தமிழர்கள் ஆர்வத்துடன் கற்றிருக்கிறார்கள். தமிழர்களின்

 **Isbn Number**: 978-93-91115-54-8

உயிரோடும் உணர்வுகளோடும் ஒன்றிக் கலந்துவிட்டது *பொன்னியின் செல்வன்.* இப்புதினத்தின் ஒவ்வொரு கதாபாத்திரங்களும் சரித்திரம் படைத்தவை. அவ்வகையில் சிறப்புடன் திகழும் அருள்மொழிவர்மனின் தனித்தன்மைகளை ஆராய்வதே இப்புத்தகப்பகுதியின் ஆய்வு நோக்கமாகும்.

**கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி**

கல்கி புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார். இவர் இயற்பெயர் ரா.கிருஷ்ணமூர்த்தி. இவர் 1899-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் தேதி தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புட்டமங்கலம் என்னும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். புட்டமங்கலத்தில் ஆரம்பப்பள்ளிப் படிப்பை முடித்த பிறகு திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். 1921-ல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவங்கிய போது, அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு தனது பள்ளிப்படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து, 1922-ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனைப் பெற்றவர் கல்கி. பின்பு 1923-ல் நவசக்தி என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

 **Isbn Number**: 978-93-91115-54-8

அவருடைய முதல் படைப்பு 1927-ல் வெளியானது. பின்பு சதாசிவம் மற்றும் எம். எஸ். சுப்புலட்சுமியுடன் இணைந்து தமிழிசை வளர்ச்சிக்காகவும் பாடுபட்டுள்ளார். மிகச் சிறந்த சமூக மற்றும் வரலாற்றுப் புதினங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார்.

கல்கி எழுதிய *பொன்னியின் செல்வன்* புதினம் மிகப்புகழ் பெற்றதாகும். தன் படைப்புகள் மூலம் இந்திய தேசிய விடுதலை போராட்டத்திலும் பங்கு வகித்துள்ளார். இவரது தியாகபூமி புதினம் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது. இவர் 5-12-1954ல் தமது 55ம் அகவையிலேயே இயற்கை எய்தி விட்டார். ‘கல்கி’யின் படைப்புகள் நாட்டுடைமை ஆகிவிட்டமையால், அவருடைய படைப்புகள் அனைத்தும் அனைவரும் பயன்படுத்தும் வகையில் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**கல்கியின் படைப்புகள்**

**புதினங்கள்**

*கள்வனின் காதலி, தியாகபூமி, மகுடபதி, அபலையின் கண்ணீர், சோலைமலை இளவரசி, அலைஓசை, தேவகியின் கணவன், மோகினித்தீவு,*

 **Isbn Number**: 978-93-91115-54-8

*பொய்மான் கரடு, புன்னைவனத்துப்புலி, அமரதாரா* எனப்பல புதினங்களைப் படைத்துள்ளார்.

**வரலாற்றுப் புதினங்கள்**

*பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன்* போன்றவை வரலாற்றுப் புதினங்களாகும்.

**சிறுகதைகள்**

*சுபத்திரையின் சகோதரன், ஒற்றை ரோஜா, தீப்பிடித்த குடிசைகள், புது ஓவர்சியர், வஸ்தாது வேணு, அமர வாழ்வு, சுண்டுவின் சந்நியாசம், திருடன் மகன் திருடன், இமயமலை எங்கள் மலை, பொங்குமாங்கடல், மாஸ்டர் மெதுவடை, புஷ்பப் பல்லக்கு, பிரபல நட்சத்திரம், பித்தளை ஒட்டியாணம், அருணாசலத்தின் அலுவல், பரிசல் துறை, ஸுசீலா எம்.ஏ., கமலாவின் கல்யாணம், தற்கொலை, எஸ். எஸ். மேனகா, சாரதையின் தந்திரம், கவர்னர் விஜயம், நம்பர், ஒன்பது குழி நிலம், புன்னைவனத்துப் புலி, திருவழுந்தூர் சிவக்கொழுந்து, ஜமீன்தார் மகன், மயிலைக் காளை, ரங்கதுர்க்கம் ராஜா, இடிந்த கோட்டை, மயில்விழி மான், நாடகக்காரி, "தப்பிலி கப்", கணையாழியின் கனவு, கேதாரியின் தாயார், காந்திமதியின் காதலன், சிரஞ்சீவிக் கதை, ஸ்ரீகாந்தன் புனர்ஜன்மம், பாழடைந்த பங்களா, சந்திரமதி, போலீஸ் விருந்து, கைதியின் பிரார்த்தனை,*


**Isbn Number**: 978-93-91115-54-8

*காரிருளில் ஒரு மின்னல், தந்தையும் மகனும், பவானி, பி. ஏ, பி. எல், கடிதமும் கண்ணீரும், வைர மோதிரம், வீணை பவானி, தூக்குத் தண்டனை, என் தெய்வம், எஜமான விசுவாசம், இது என்ன சொர்க்கம், கைலாசமய்யர் காபரா, லஞ்சம் வாங்காதவன், ஸினிமாக் கதை, எங்கள் ஊர் சங்கீதப் போட்டி, ரங்கூன் மாப்பிள்ளை, தேவகியின் கணவன், பால ஜோசியர், மாடத்தேவன் சுனை, காதறாக் கள்ளன், மாலதியின் தந்தை, வீடு தேடும் படலம், நீண்ட முகவுரை, பாங்கர் விநாயகராவ், தெய்வயானை, கோவிந்தனும் வீரப்பனும், சின்னத்தம்பியும் திருடர்களும், விதூஷகன் சின்னுமுதலி, அரசூர் பஞ்சாயத்து, கவர்னர் வண்டி, தண்டனை யாருக்கு?, சுயநலம், புலிராஜா, விஷ மந்திரம்* போன்ற சிறுகதைகள் அனைத்தும் கல்கியின் எழுத்தாற்றலை எடுத்தியம்பும்.

**விருதுகள்**

1948ல் இவர் எழுதிய அலைஓசைக்காக 1956ல் சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ளார். 1953ம் ஆண்டு சங்கீத கலாசிகாமணி விருதும் பெற்றுள்ளார்.

**அஞ்சல் தலை**

1999ல் இந்திய அரசு கல்கி இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது.


**Isbn Number**: 978-93-91115-54-8




**1. கல்கி அஞ்சல் தலை (*பொன்னியின் செல்வன்*)**

**அருள்மொழி வர்மன்**

அருள்மொழிவர்மன் என்ற இராசராச சோழனின் சிலை தஞ்சாவூரில் அமைந்துள்ளது. அருள் மொழிவர்மனுக்கு, பொன்னியின் செல்வன், இராசராச சோழன், மும்முடிச்சோழன், சிவபாதரசேகரன், சோழ நாராயணன், கேரளாந்தகன், சிங்களாந்தகன், பாண்டிய குலசனி, அழகிய சோழன், செயங்கொண்டான், திருமுறை கண்ட சோழன், தெலிங்கு குலகாலன் போன்ற பல பெயர்களுண்டு.



**2. இராசராச சோழன்**

980 ஆண்டுகளுக்கு முன்னால் தென்னாட்டில் இணையில்லாத சக்கரவர்த்தியாக விளங்கி வந்த கோஇராசகேசரி வர்மர் பராந்தக சுந்தர சோழ மன்னரின்; கடைக்குட்டிச் செல்வப் புதல்வன் அருள்மொழிவர்மன். ஸ்ரீ சுந்தரசோழ மன்னர் நல்ல அழகிய தோற்றம்


**Isbn Number**: 978-93-91115-54-8

வாய்ந்தவர். அவருடைய தந்தை அரிஞ்சயர். சோழகுலத்துக்கு எதிரிகளாக இருந்த வைதும்பராயர் வம்சத்துப் பெண்ணாகிய கலியாணியை அவளுடைய மேனி அழகைக் கண்டு மோகித்து மணந்து கொண்டார்.

அரிஞ்சயருக்கும் கலியாணிக்கும் பிறந்த சுந்தர சோழருக்குப் பெற்றோர்கள் வைத்த பெயர் பராந்தகர். அவருடைய தோற்றத்தின் வனப்பைக் கண்டு நாட்டாரும் நகரத்தாரும் 'சுந்தர சோழர்' என்று அவரை அழைத்து வந்தார்கள். அதுவே அனைவரும் வழங்கும் பெயராயிற்று. அத்தகையவருக்குப் பிறந்த குழந்தைகள் எல்லாருமே அழகில் மிக்கவர்கள்தான். ஆனால் கடைசியில் பிறந்த அருள் மொழிவர்மன் அழகில் அனைவரையும் மிஞ்சிவிட்டான். பழையாறை அரண்மனைகளில் வாழ்ந்த இராணிமார்களுக்கெல்லாம் செல்லக்குழந்தை. அவன் குழந்தையாக இருந்தபோது சோழ வம்சத்து இராணிமார்கள் முத்தமிட்டு முத்தமிட்டுக் கன்னம் கனியச் செய்து விடுவார்கள்.

**…மழலைகனிந்**

**தமு தமூறு பசுந்தேறல் அசும்பு நாறத் தெய்வமண**

**முருகு நாறுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே**


**Isbn Number**: 978-93-91115-54-8

**மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி முருகா முத்தந் தருகவே. (ஸ்ரீகுமரகுருபரர். முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ். முத்தப்பருவம், பா-5.1)**

அருள்மொழிவர்மனின் அழகில் மயங்கி சோழ இராணிமார்கள் முத்தமிடும் காட்சி முத்தக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் முத்தப்பருவத்தில் உள்ள முருகனின் முத்தப் பருவக காட்சிகள் அனைத்தையும் மிஞ்சிவிடும் அளவிற்கு உள்ளது. அருள்மொழி மீது அளவுகடந்த அன்பை அனைவரும் கொண்டிருந்தனர் என்பது புலப்படுகிறது.

**அருள்மொழிவர்மன் – பொன்னியின் செல்வன்**

ஒருநாள் அரண்மனைப் படகில் சக்கரவர்த்தியும் இராணிகளும் குழந்தைகளும் உட்கார்ந்து காவேரியில் உல்லாசப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது, திடீரென்று, குழந்தை எங்கே? குழந்தை அருள்மொழி எங்கே? என்று குந்தவை குரல் எழுப்பினாள். அப்பொழுது அருள்மொழிவர்மனுக்கு அகவை ஐந்து. குந்தவைக்கு அகவை ஏழு. அவள்தான் அரண்மனையில் கண்ணினும் இனிய செல்லக்குழந்தையாகத் திகழ்ந்த அருள்மொழிவர்மன் படகில் இல்லாததைக் கண்டு முதலில் குழந்தையைக் காணோம் என்று கத்தினாள். குழந்தை எங்கே? குழந்தை அருள்மொழி எங்கே? என கூச்சலிட்டாள்; கதறினாள். அழுது புலம்பினாள்.


**Isbn Number**: 978-93-91115-54-8

எல்லாரும் கதிகலங்கிப் போனார்கள். படகில் அங்குமிங்கும் தேடினார்கள். ஆனால் அரண்மனைப் படகில் அதிகமாகத் தேடுவதற்கு இடம் எங்கே? குந்தவையும், ஆதித்தனும் கதறி அலறினார்கள். இராணிகள் புலம்பினார்கள். தோழிமார்கள் மனம் துடிதுடித்து அலறினார்கள். படகோட்டிகள் காவேரி வெள்ளத்தில் குதித்துத் தேடினார்கள்.

சுந்தர சோழரும் குதித்துத் தேட ஆரம்பித்தார். இருப்பினும் எங்கே என்று தேடுவது? ஆற்றுவெள்ளம் அருள்மொழிவர்மனை எவ்வளவு தூரம் அடித்துக் கொண்டு போயிருக்கும் என்று யார் கண்டது? குழந்தை எப்போது வெள்ளத்தில் விழுந்தது என்பது யாருக்கும் தெரியாது. நோக்கம், குறிக்கோள் என்பது ஒன்றுமில்லாமல் காவேரியில் குதித்தவர்கள் நாலாபுறமும் பாய்ந்து துழாவினார்கள். படகில் இருந்த ராணிகள் - தோழிமார்களில் சிலர் மூர்ச்சைப் போட்டு விழுந்துவிட்டார்கள். அனைவரும் தேடித்தேடி ஓய்ந்து போன சூழலில் எதிர்பாராத ஓர் நிகழ்வு நடந்தது.

**ஓர் அற்புதக் காட்சி தென்பட்டது. படகுக்குச் சற்றுத் தூரத்தில் ஆற்று வெள்ளத்தின் மத்தியில் அது தெரிந்தது. பெண் உருவம் ஒன்று இரண்டு கைகளிலும் குழந்தையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நின்றது. அந்த மங்கையின்**

 **Isbn Number**: 978-93-91115-54-8

**வடிவம் இடுப்பு வரையில் தண்ணீரில் மறைந்திருந்தது. அப்பெண்ணின் பொன் முகமும், மார்பகமும், தூக்கிய கரங்களும் மட்டுமே மேலே தெரிந்தன. அவற்றிலும் பெரும் பகுதியைக் குழந்தை மறைத்துக் கொண்டிருந்தது. (பொன். சுழ. ப.167)**

எல்லோரும் அக்காட்சியைப் பார்த்தனர். சுந்தரசோழர் உடனே பாய்ந்து நீந்தி அந்தத் திசையை நோக்கிச் சென்று கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கிக் கொண்டு படகு அருகில் சென்றார். படகிலிருந்தவர்கள் குழந்தையைச் சுந்தர சோழரிடமிருந்து வாங்கிக்கொண்டு சக்கரவர்த்தியையும் கையைப் பிடித்து படகில் ஏற்றினார்கள்.

சக்கரவர்த்தி படகில் ஏறியதும் நினைவற்று விழுந்துவிட்டார். அவரையும், குழந்தையையும் கவனிப்பதில் அனைவரும் தங்கள் துன்பத்தை மறந்துள்ளனர். இச்சூழலில் குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்த பெண் என்னானாள்? என்று யாரும் கவனிக்கவில்லை. அவளுடைய உருவம் எப்படியிருந்தது? என்று அடையாளம் சொல்லும்படி கூட எவரும் கவனித்துப் பார்க்கவில்லை. குழந்தையைக் காப்பாற்றியவள் நான்! என்று பரிசு கேட்பதற்குக்கூட அந்த வரவில்லை.


**Isbn Number**: 978-93-91115-54-8

**காவேரி நதியாகிய தெய்வந்தான் இளவரசர் அருள்மொழிவர்மரைக் காப்பாற்றிக் கொடுத்திருக்க வேண்டும் என்று அனைவரும் ஒரு முகமாக முடிவு கட்டினார்கள். ஆண்டுதோறும் அந்த நாளில் பொன்னி நதிக்குப் பூஜை போடவும் ஏற்பாடாயிற்று. அதுவரை அரண்மனைச் செல்வனாயிருந்த அருள்மொழிவர்மன் அன்று முதல் 'பொன்னியின் செல்வன்" ஆனான். (மேலது. ப.167)**

இத்தகைய நிலையில் அரச குடும்பத்தார் அனைவரும் ‘பொன்னியின் செல்வன்’ என்றே அருள்மொழிவர்மனை அழைத்து வந்தார்கள்.

**அருள்மொழிவர்மன் வீரச்சிறப்பு**

சுந்தர சோழருக்கும், வீரபாண்டியருக்கும் நடந்த போர்களில் ஈழத்திலிருந்து மகிந்தன் எனும் அரசனின் படைகள் வீரபாண்டியருக்குப் பெரும் உதவிகள் புரிந்தன. ஆதித்த கரிகாலன் வீரபாண்டியரை வெற்றி கொண்ட பின்பு, சோழ படைகள் ஒன்றை இலங்கைக்கு அனுப்பிச் சிங்கள மன்னர்களுக்குப் பாடம் கற்பிக்க எண்ணினார். கொடும்பாளூர்ச் சிற்றரசர் குடும்பத்தைச் சேர்ந்த பராந்தகன், சிறிய வேளான் என்னும் தளபதியின் தலைமையில் படையைச் சிங்களத்துக்கு அனுப்பினார். மகிந்தரராஜனுடைய தளபதி ஸேனா என்பவனின்


**Isbn Number**: 978-93-91115-54-8

தலைமையில் சிங்களப்படை எதிர்பாராத விதத்தில் வந்து சோழப் படையுடன் போர் நடத்த, தாக்குதலில் பராந்தகன் சிறிய வேளான் தன் வீரப்புகழை நிலைநிறுத்திவிட்டு இன்னுயிரைத் துறந்து விடுகிறான்!.

ஈழமண்டலப் படைக்குத் தலைமை வகித்துச் செல்லச் சோழநாட்டின் மற்றத் தளபதிகளுக்குள்ளே பெரும்போட்டி ஏற்பட்டு போட்டியிலிருந்து பொறாமையும் புறங்கூறலும் எழுந்துவிடுகிறது. இந்தப் போட்டியை அடியோடு நீக்க மன்னரின் இளம் புதல்வன் அருள்மொழிவர்மன் முன்வந்தான்.

> **அப்பா பழையாறை அரண்மனையில் அத்தைகளுக்கும் பாட்டிகளுக்குமிடையில் இத்தனை நாள் நான் செல்லப் பிள்ளையாக வளர்ந்தது போதும், ஈழப்போருக்குத் தலைமை வகித்து நடத்த நானே இலங்கை சென்று வருகிறேன்! என்றார் இளங்கோ அருள்மொழிவர்மர் (பொன்.புது.ப.42)**

அருள்மொழிவர்மன் தன் பத்தொன்பதாம் அகவையில் இவ்வாறு பேசியது அவனது வீரச்சிறப்பை எடுத்துரைக்கிறது.

**அருள்மொழிவர்மன் - குந்தவை அன்பு**

அருள்மொழிவர்மன் மீது எல்லோரிலும் அதிகமாக அன்பற்றிருந்தவள் தமக்கையாகிய குந்தவை.

 **Isbn Number**: 978-93-91115-54-8

அருள்மொழிவர்மனுக்கு இரண்டு பிராயந்தான் மூத்தவள். தம்பியை வளர்க்கும் பொறுப்பைத் தன் தலை மேலேயே சுமந்திருப்பதாக நினைப்பவள் குந்தவைப் பிராட்டி. குந்தவையிடம் அருள்மொழியும் அதற்கிணையான வாஞ்சை வைத்திருந்தான். தமக்கை இட்ட கோட்டைத் தம்பி தாண்டுவது கிடையாது.

இளைய பிராட்டி ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும். அதற்கு மாறாகப் பிரம்மாவும், விஷ்ணுவும், சிவனும் சேர்ந்து வந்து சொன்னாலும் அருள்மொழிவர்மன் பொருட்படுத்த மாட்டான். தமக்கையின் வாக்கே தம்பிக்குத் தெய்வத்தின் வாக்காகும்.

**அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை. (குறள் - 76)**

அறத்திற்கே அன்பு துணையாகும் என்று சொல்பவர் அறியாதவர். ஆராய்ந்தால் மறச்செய்கைகளுக்கும் அன்பே துணையிருக்கும் என்பதே உண்மை. வள்ளுவப் பெருந்தகையின் இவ்வாக்கிற்கு ஏற்ற உவமையாக அருள்மொழிவர்மனைக் கூறலாம். குந்தவைப் பிராட்டி ஓயாது சிந்தித்து கடைசியாக, இலங்கைக்குத் தளபதியாகப் போவது அருள்மொழிதான் என்ற முடிவுக்கு வந்தாள்.


**Isbn Number**: 978-93-91115-54-8

**தம்பி, அருள்மொழி! உன்னை ஒரு கணம் பிரிந்திருப்பதென்றாலும் எனக்கு எத்தனையோ கஷ்டமாகத்தானிருக்கிறது. ஆயினும் நானே உன்னைப் போகச் சொல்லவேண்டிய சமயம் வந்துவிட்டது. இலங்கைப் படையின் தலைவனாக 'நீதான் போகவேண்டும்!' என்றாள். இளவரசர் குதூகலத்துடன் இதற்குச் சம்மதித்தார். அரண்மனை வாழ்விலிருந்தும் அந்தப்புர மாதரசிகளின் அரவணைப்பிலிருந்தும் எப்போது தப்புவோம் என்று அருள்மொழிவர்மரின் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. அருமைத் தமக்கையே இப்போது போகச் சொல்லி விட்டாள்! இனி என்ன தடை? (பொன்.புது.ப.42)**

குந்தவையே அனுமதி அளித்தவுடன் அருள்மொழிவர்மனின் உள்ளத்தில் மேலும் பல மடங்கு ஆற்றல் கூடி விட்டது. குந்தவை தேவி மனம் வைத்துவிட்டால் சோழ சாம்ராஜ்யத்தில் நடக்காத காரியம் எதுவும் கிடையாது என்று நினைப்பவன் அருள்மொழிவர்மன். அருமைத் தம்பியைப் போர் முகத்துக்கு அனுப்புவதற்குக் குந்தவை தேவி பழையாறையின் பிரதான மாளிகையில் மங்கள நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, அரண்மனை முற்றத்தில் வெற்றி முரசுகள் முழங்க வைத்து, சிறுபறைகள் ஒலிக்க


**Isbn Number**: 978-93-91115-54-8

வாழ்த்துக் கோஷங்கள் ஆகாயத்தை மிரளச் செய்ய பெரும் ஆரவாரத்துடன் அனுப்பி வைத்தாள். சோழ குலத்துத் தாய்மார்கள் அனைவரும் அரண்மனையின் செல்லக் குழந்தைக்கு ஆசி கூறி, நெற்றியில் மந்திரித்த திருநீற்றை இட்டு, திருஷ்டி கழித்து வழி அனுப்பி வைத்தார்கள்.

இளங்கோ அருள்மொழிவர்மன் தென்திசைச் சோழப்பகுதிக்கு மாதண்ட நாயகனாகி, இலங்கை மீது சில காலம் போர் நடத்தினான். ஆனால், போர் எளிதில் முடியவில்லை. அருள்மொழிவர்மன் போர் நடத்திய முறைக்கும் மற்றவர்களின் போர் முறைக்கும் வித்தியாசம் இருந்தது. தாய் நாட்டிலிருந்து போர்கருவிகள் வந்து சேராததனால் ஒரு முறை தாய் நாட்டுக்கு வந்து தந்தையிடம் சொல்லித் தம் விருப்பத்தின்படி எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு மறுபடியும் ஈழத்தின் மீது போர் தொடுக்கலானான்.

ஈழத்திற்கு சென்ற அருள்மொழிவர்மன், மகிந்தனை பெரும் இடங்களில் வெற்றி கொண்டு சில இடங்களைக் கைப்பற்றினான். அவன் புதிய முறைகளை கையாண்டான். சோழ தேசத்திலிருந்தே சோழ வீரர்களுக்கு உணவுகள் அனுப்பபட்டது. போரினால் சிதலமடைந்த புத்த கோவில்கள் மீண்டும் சரிசெய்யப்பட்டது. மகிந்தராஜனுடைய போர்

 **Isbn Number**: 978-93-91115-54-8

வீரர்களுடன் மட்டுமே சோழபோர்வீரர்கள் போர் நெறிமுறைகளுடன் சண்டையிட்டனர். ஈழத்தில் மக்களின் வாழ்வில் எவ்வித இடையூரும் அருள்மொழிவர்மன் மேற்கொண்ட போரினால் ஏற்படவில்லை.

**பலிபெறு நன்னகரும் பள்ளியிடனும்**
**ஒலிகெழு நான்மறையோர் இல்லும்-**
**நலிவொரீஇப்**
**புல்லா; இரியப் பொருநர் முனை கெடுத்த**
**வில்லார்க்கு அருள் சுரந்தான் வேந்து**
**(புறப்பொருள் வெண்பாமாலை. துறை-பேராண் வஞ்சி, பா.1)**

போர் நடக்கும் நாட்டில் மறவர்கள், கோயில், பள்ளியிடம், வேதம் ஓதும் அந்தணர் இல்லம் ஆகியன அழிவுக்குள்ளாகாதபடி போர் அறநெறிப்படி போரிட வேண்டும். இதுவே அரசியல் அறமாகும். போரினைக் கைவிட்டு, தன் நாடு திரும்புதலும் பேராண் வஞ்சி எனப்பெறும். புறப்பொருள் வெண்பாமாலை எடுத்துரைத்த போர் அறநெறிப்படி அருள்மொழிவர்மன் போர் புரிந்துள்ளான். இது அவனின் வீரச்சிறப்பைக் காட்டுவதோடு மட்டுமில்லாமல் மக்கள் மத்தியில் சிறந்த மன்னனதாக திகழக்கூடியவன் என்பதையும் பிரதிபலிக்கிறது.


**Isbn Number**: 978-93-91115-54-8

**சிங்காசனம் ஏறுதல்**

செம்பியன் மாதேவி குழந்தை பிறந்த பொழுது இறந்து காட்சி அளித்தமையால் மன்னர் அத்துன்பத்தைத் தாங்கி கொள்ளமாட்டார் என்று அநிருத்தரிடம் கூறுகிறாள். அச்சமயம் தோட்டத்தில் உள்ள ஊமைப்பெண்ணிற்கு ஓர் ஆண் மகவும் ஓர் பெண் மகவும் பிறந்ததை அறிந்து ஆண் மகவை மாற்றி விடுகிறார் அநிருத்தர். ஊமைப்பெண்ணிடம் குழந்தை சென்றதும் உயிர் பிழைத்து விட்டது. செம்பியன் மாதேவி மகன் சேந்தன் அமுதனாக வளர்கிறான்.

ஊமைப் பெண்ணின் மகன் அரண்மனையில் மதுராந்தகனாக வளர்கிறான். மக்களுக்கும் மதுராந்தகனை விட அருள்மொழிவர்மனே பிரியமான இளவரசராகக் காட்சி அளித்திருக்கிறான். சுந்தரசோழருக்குப் பிறகு மதுராந்தகன் நாட்டை ஆளும் சூழல் வந்துவிட்டது. அருள்மொழிவர்மனும் சித்தப்பாவே நாட்டை ஆள வேண்டும் என்று கூறிவிடுகிறான்.

> **என் சிறிய தகப்பனாராகிய மதுராந்தகத் தேவர்தான் சோழ சிங்காசனத்தில் வீற்றிருக்க வேண்டியவர். அவர் தங்களுடைய சொந்த மகனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு ஆதரவுடன் வளர்க்கப்பட்டவர். என்னைக் காவேரி வெள்ளத்தில் மூழ்காமல் காப்பாற்றியதோடு,**

 **Isbn Number**: 978-93-91115-54-8

> **பின்னரும் பல முறை உயிர் பிழைப்பதற்கு உதவி செய்த மந்தாகினி தேவி வயிற்றில் பிறந்த புதல்வர். ஆகையால், எப்படிப் பார்த்தாலும் சோழ சிங்காசனத்தில் ஏற உரிமை உள்ளவர். அவருடைய உரிமையில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், நான் அதைத் தீர்த்து வைப்பேன்! சோழ சிங்கா சனத்தில் எனக்குள்ள பாத்தியதையைத் தங்கள் பாத தாமரைகளின் ஆணையாகத் தியாகம் செய்வேன். ஆகையால், தாங்கள் மதுராந்தகத் தேவர் தங்கள் புதல்வர் அல்லவென்று சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. மதுராந்தகர் சோழ சிங்கசனத்தைத் தியாகம் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை! (பொன். தியாக. ப.637)**

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறியது பதவியில் அவருக்கு உள்ள பற்றற்ற நிலையைக் காட்டுகிறது. இருப்பினும் செம்பியன் மாதேவி சோழ குல வாரிசே நாட்டை ஆளவேண்டும் என்று கருதி மதுராந்தகனிடம் தன் பிள்ளை நீ இல்லை என்று கூறிவிடுகிறாள். மதுராந்தகன் அருள்மொழிவர்மன் தங்கள் இருவரையும் அவ்வாறு பேச வைக்கிறான் என்று கூறி மறுத்து, தான் மன்னனாக விரும்புகிறேன் என்றும் கூறுகிறான். அப்பொழுது அநிருத்தர் சாவதானமான

 **Isbn Number**: 978-93-91115-54-8

குரலில், இளவரசே! தாங்கள் அருள்மொழிவரைக் குறைகூற வேண்டாம் ஈழங்கொண்ட அவ்வீரர் இந்த,

> **தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்துள்ள படை வீரர்களிடத்திலும் மக்களிடத்திலும் சென்று தாங்களே மன்னனாக வேண்டும் என்று நல்லவார்த்தை சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்தி வருகிறார். அவருடைய சித்தப்பாவாகிய தாங்கள் உயிரோடிருக்கும்போது தாம் சிங்காதனம் ஏறுவது தர்மம் அல்லவென்றும், அம்மாதிரி வீரர்களும் மக்களும் கோரக்கூடாதென்றும் சொல்லி அவர்கள் மனத்தை மாற்றிச் சரிப்படுத்த முயன்று வருகிறார் (பொன். தியாக. ப.634)**

என்று கூறுகிறார். மாதேவியும் தன்பிள்ளைவிட அதிகமான பாசம் வைத்திருப்பினும் சோழ குல வாரிசே நாட்டை ஆளவேண்டும் என்ற காரணத்தினால் தன்பிள்ளை இல்லை என்ற உண்மையைக் கூறிவிடுவதாக மிரட்டுகிறாள். மதுராந்தகனும் அருள்மொழிவர்மனே மன்னனாக வேண்டும் என்று கூறிவிடுகிறான். இச்சூழலில் கந்தமாறன் வந்தியத்தேவன் மீது கொண்ட பகையால் அவனைக் கொல்ல வேல் வீச அது **வேல் விர் என்ற சத்தத்துடன் சென்று**

 **Isbn Number**: 978-93-91115-54-8

**கண்மூடித்திறக்கும் நேரத்தில் மதுராந்தகன் பேரில் பாய்ந்தது. (பொன். தியாக. ப.675)**

நாளடைவில் குந்தவை சோழர் கண்டராதித்தருக்கும் செம்பியன் மாதேவிக்கும் பிறந்த சிவப்பக்திப் பூண்ட சேந்தன் அமுதன் தான் உண்மையான மகன் என்று கூறி அழைத்து வந்து புது மதுராந்தகனை மன்னராக்க முயல்கிறாள். அவனோ மறுத்து அருள்மொழிவர்மன் தான் மன்னராக வேண்டும் என்று உறுதியுடன் கூறிவிடுகிறான்.

**தியாக சிகரம்**

அருள்மொழிவர்மனுக்குத் திருமுடிசூட்டுவிழா நடக்கவிருப்பதை எண்ணி மக்கள் மகிழ்ச்சியில் திழைத்திருந்தனர். செம்பியன் மாதேவி, குந்தவை, பூங்குழலி, வானதி, வானமாதேவி போன்ற அரண்மனைப் பெண்மணிகள் அனைவரும் அளவில்லாத ஆர்வம் கண்களில் ததும்பப் பொன்னியின்செல்வரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சோழநாட்டின் ஆண்கள், பெண்கள், வயோதிகர்கள், குழந்தைகள், நகரமாந்தர்கள், கிராமவாசிகள், வர்த்தகர்கள், உழவர்கள் அனைவரும் ஒருமுகமாகப் பொன்னியின்செல்வருக்கு முடிசூட்டுவதை வரவேற்றார்கள். மக்கள் அருள்மொழிவர்மன் குடிமக்களிடம் கலந்து பழகியதை எண்ணியும் தற்போது

முடிசூட்டுவிழாவினை எண்ணியும் இன்புற்றிருந்தனர். அருள்மொழிவர்மன் முடிசூட்டுவிழா இராமனின் பட்டாபிஷேக நிகழ்வு போன்று குதூகலமாகக் காணப்பட்டுள்ளது. வயதுமுதிர்ந்த பெண்மணிகள் எல்லாரும் கோசலையைப் போன்றும், இளம்பெண்கள் சீதாதேவி அடைந்த ஆனந்தத்தைத் தாங்களும் அடைந்து, தத்தம் கணவன்மார்களுக்கே முடிசூட்டப்போவதாகக் கருதித் தங்களை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டும் காணப்பட்டுள்ளனர்.

அயோத்தி மாநகரத்தில் வாழ்ந்த முதிய பிராயத்து ஆண்மக்கள் எல்லாரும் தசரதனைப் போல் தங்களை எண்ணி கொண்டார்கள். புதல்வர்கள் தங்களுக்கே மகுடாபிஷேகம் நடக்கப் போவதாக எண்ணியும் மகிழ்ந்தனர். இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கத் தசரதர் முடிவு செய்ததை அறிந்த அயோத்தி மக்கள் எல்லாரும் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதை

**மாதர்கள் வயதின்மிக் கார் கோசலை மனத்தை**
**ஒத் தார்;**
**வேதியர் வசிட்டன்ஒத் தார்; வேறுள மகளிர் எல்**
**லாம்**
**சீதையை ஒத்தார்; அன்னாள் திருவினை ஒத்தாள்;**
**அவ்வூர்**

 **Isbn Number**: 978-93-91115-54-8

**சாதன மாந்தர்எல் லாம் தயரதன் தன்னைஒத் தார்**
**(இரசிகமணி டி.கே.சி இராமகாதை அயோத்தி கைகேசி சூழ்வினை பா.10)**

என்று இராமகாதை நன்கு வர்ணிக்கிறது. அயோத்தி மக்களின் இன்பநிலையைக் கம்பர் அற்புதமாகச் சித்தரித்தள்ளார். அயோத்தி மக்களையும் மிஞ்சிவிட்டனர் சோழநாட்டு மக்கள்.

உலகில் செயற்கரிய வீரச்செயல்களாலும் பரோபகாரச் செயல்களாலும் சிலர் மக்களின் மனதைக் கவர்ந்து விடுகின்றனர். அவ்வகையில் அருள் மொழிவர்மனும் சோழநாட்டு மக்களின் உள்ளத்தில் இடம்பிடித்திருக்கின்றான். அருள்மொழிவர்மன் இயற்கை அன்னையின் அருளிற்குப் பாத்திரமானவன். அவனுடைய தோற்றமே பார்ப்பவர்கள் அனைவரையும் வசீகரித்துவிடும். இனிய பேச்சும் கனிவான பண்பும் அனைவரின் அன்பையும் பெற்றிடச் செய்தன. ஈழநாட்டுப் போர்களத்தில் வீரதீரச் செயல்கள் அதிகமாகப் புரிய வாய்ப்புகள் கிடைக்காவிட்டாலும், அவரின் வீரச்செயல்கள் சார்ந்த கற்பனைச் செய்திகள் மக்களிடையே பரவிவிட்டன. மக்கள் அருள்மொழிவர்மன் மீது கொண்ட அன்பினால் மிகையாகவும் எண்ணி கொண்டனர்.

 **Isbn Number**: 978-93-91115-54-8

இச்சூழலில் சபையில் அருள்மொழிவர்மன் சோழகுலத்தின் புராதன மணிமகுடத்தைத் தமது கரங்களில் தாங்கிக் கொண்டும், தந்தையே! விஜயாலயசோழர் முதல் நம் முன்னோர்கள் அணிந்து வந்த இந்த மணி மகுடத்தைத் தாங்கள் எனக்கு அளிக்க முன்வந்துள்ளீர்கள். ஆகையால், இந்தக்கிரீடம் என் உடைமை ஆகிவிட்டது என்று கூறி, திடீரென்று ஒரு வியப்பிற்குரிய செயலைப் புரிந்துவிட்டான்.

**என்னைவிட இந்தக் கிரீடத்தை அணியத் தகுந்தவர் இங்கே ஒருவர் இருக்கிறார். அவர் என்னை விட பிராயத்தில் மூத்தவர். இந்தச் சோழ இராஜ்யத்துக்கு என்னைவிட அதிக உரிமை அவருக்கு நிச்சயமாக இருந்த போதிலும் அவர் அதைக் கோர வில்லை. நான் முடிசூட்டிக் கொண்டு சிங்காதனத்தில் அமர்வதைப் பார்த்து மகிழச் சித்தமாக இங்கு வந்திருக்கிறார். அவர் என் உயிரை ஒரு தடவை காப்பாற்றினார். இந்தச் சோழ குலத்துக்கு நேர்வதற்கு இருந்த பெரும் விபத்து நேரிடாமல் தடுத்தார். இப்படிப்பட்ட சிறப்பான காரியம் எதுவும் நான் இதுவரையில் இந்நாட்டுக்குச் செய்தேனில்லை. ஆகையால் இந்த மணிமகுடத்தை மகான் கண்டராதித்தரின் குமாரரும், என் சிறிய தந்தையுமான மதுராந்தகத்**


**Isbn Number**: 978-93-91115-54-8

**தேவரின் தலையில் சூட்டுகிறேன்!" இவ்விதம் பொன்னியின் செல்வர் சொல்லிக் கொண்டே சக்கரவர்த்தியின் மறுபக்கத்தில் வீற்ருந்த மதுராந்தகரின் அருகிலே சென்று அவர் சிரஸில் கிரீடத்தை வைத்தார். (பொன். தியாக. ப.735)**

அனைவரும் வியப்பில் ஆழ்ந்துவிட்டனர். மதுராந்தகர் மெய்மறந்து பித்துப் பிடித்தவர் போன்று இருந்தார். மணிமகுடத்தைச் சூட்டியதும் பொன்னியின் செல்வர், ‘கோப் பரகேசரி மதுராந்தக உத்தமச் சோழதேவர் வாழ்க!’ என்று முழங்கினார்.

‘சோழ சாம்ராஜ்ய சக்கரவர்த்தி உத்தமச் சோழர் வாழ்க!’ என்று வந்தியத்தேவன் பெருங்குரலில் கூவினான். சுந்தரசோழ உணர்ச்சி மிகுதியால் பேசும் சக்தியை இழந்து தம் கரங்களில் இருந்த மலர்களை மதுராந்தகர் மீது தூவி வாழ்த்தியுள்ளார். மதுராந்தகர் செம்பியன் மாதேவியை வணங்க, அவர் கண்களில் இருந்து கண்ணீர் அருவி போல் சொரிந்தது.

இளவரசர் அருள்மொழிவர்மர் தமக்கு அளிக்கப்பட்ட இராஜ்யத்தைத் தம் சிறிய சித்தப்பா மதுராந்தகருக்கு அளித்துவிட்டார் என்ற வாய்மொழி செய்தி மக்களிடையே பரவியது. ‘பொன்னியின் செல்வரின் பெருங்குணத்துக்கு இது உகந்ததே’ என்று மக்கள் கருதியமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.


**Isbn Number**: 978-93-91115-54-8

**கதைக்கரு – ஆசிரியர்கூற்று**

**சுந்தரசோழனுக்குப் பின்னர் அவனுடைய மகன் அருள்மொழிவர்மனே சோழ சிங்காதனம் ஏறி அரசாள வேண்டும் என்று சோழ நாட்டு மக்கள் பெரிதும் விரும்பினார்கள் ஆயினும் அருள்மொழி வர்மன் தன் பெரிய பாட்டனாகிய கண்டராதித்தனுடைய புதல்வனும், தளக்குச் சிறிய தகப்பன் முறையிலிருந்தவனுமான உத்தமசோழனுடைய உரிமையை மதித்து அவனுக்கு முடிசூட்டி வைத்தான் என்று திருவாலங் காட்டுச் செப்பேடுகள் அறுதியிட்டு உறுதி கூறுகின்றன. (பொன். தியாக. ப.751)**

இந்த நிகழ்ச்சியை பல செப்பேடுகளும், கல்வெட்டுக்களும், அந்தக்காலத்தில் அறிஞர்கள் பலரால் எழுதப்பட்ட நூல்களும் உறுதிப்படுத்துகின்றன.

அசோக சக்கரவர்த்தி கலிங்கநாட்டுப் போரில் மகத்தான வெற்றி அடைந்த பிறகு, இனி யுத்தமே வேண்டாம் என்று முடிவு செய்ததைத்தான், அருள்மொழிவர்மனின் தியாகத்துக்கு இணையாகக் கூறலாம் என்றும் பொன்னியின் செல்வன் கதையில் சிகரமான சம்பவம் அருள்மொழிவர்மனின் ஒப்பற்ற தியாகமேயாகும் என்றும் அதனாலேயே இக்கதையின்


Isbn Number: 978-93-91115-54-8

ஐந்தாவது பகுதிக்கு ‘தியாகசிகரம்’ என்று பெயர் தரப்பட்டது என்றும் ஆசிரியரே கூறியுள்ளார்.

**முடிவுரை**

தமிழ் கலாச்சாரத்தின், சங்க பாரம்பரியத்தின் படி வீரமும் அன்பும் சமூகத்தின் இரு கண்கள். இது அருள்மொழிவர்மனின் பாத்திரத்தில் திறம்படக் காட்டப்பட்டுள்ளது. அருள்மொழிவர்மனின் குணங்கள் புகழ்பெற்ற பேரரசரின் இயல்பான தனித்தன்மையைக் காட்டுகின்றன.

**துணைநூற் பட்டியல்**

[1] இரசிகமணி டி.கே.சி. *இராமகாதை.* அயோத்தி கைகேசி சூழ்வினை, http://surl.li/afaew 8.9.2021, 12.22 pm.

[2] கல்கி. *பொன்னியின் செல்வன்.* ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை-05.

[3] ஸ்ரீ குமரகுருபரர். *முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்.* முத்தப்பருவம், சாரதா பதிப்பகம், சென்னை.

[4] தி.மகாலட்சுமி (க.ஆ), சா.கிருட்டிணமூர்த்தி (ப.ஆ). *இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-*3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.

[5] தா. ம. வெள்ளை வாரணம். *புறப்பொருள்*


**Isbn Number**: 978-93-91115-54-8

*வெண்பாமாலை*. திருப்பனந்தாள் மட வெளியீடு, தஞ்சாவூர், 1967.



**Isbn Number**: 978-93-91115-54-8

# Portrayal of the Rubber Workers Life in *Paalmarakkattinile*

**Dr P.M. Jayakala,** Assistant Professor, Department of Tamil,
S.T. Hindu College, Nagercoil, Tamil nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**
**DOI: 10.5281/zenodo.5534049**

## Abstract

*"Paalmarakkattinile" is a social novel by Akilan. The locale of the novel is the British-owned victory rubber estate in Malaysia. This novel brings out the hardships of indentured labourers who were tricked and brought from Tamil Nadu, Kerala and Sri Lanka. The novelist also brings out the love that blossoms among these indentured labourers. The livelihood of these labourers, who live in houses without electricity and have Tamil medium education until the sixth standard, is well brought out by the novelist. The novel portrays the life of the rubber workers in detail. Hence, the chapter delves deep to bring out the pain, agony, turmoils faced by the workers for their livelihood in a remote place full of wilderness.*

**Keywords:** Portrayal, Rubber Workers, Life, *Paalmarakkattinile*

## References

[1] Akilan, *Paalmarakkattinile*, Dhagam, Chennai-17, 2017.

[2] Elamboorananar, *Tholkappiyam Porulathikaram*, Saratha Pathipppagam, Chennai.

[3] Karunanidhi, Tirukkural, Tirumakal Nilaiyam, Chennai-17, 2001.

[4] Sakthivel, *Nattuppura Iyal Aayvu*, Manivasakar Pathippagam, Chennai-08, 2018.

[5] Samynathaiyar, *Kuroonthokai*, Kabeer Pathippagam, Chennai, 1962.

[6] Bagthavatsala Bharathi, *Panpattu Manidaviyal*, Meyyappan Pathippagam, Chithamparam,12016.

[7] Varatharason, *Ilakkiyamarapu*, Barinilaiyam, Chennai-08, 1990,

[8] Sreekumar, *Tamil Ilakkiyavaralaroo*, Sree Chenpagam Pathippagam, Chennai-17, 2014.

 **Isbn Number**: 978-93-91115-54-8

# பால்மரக்காட்டினிலே நவிலும் ரப்பர் தொழிலாளர்களின் வாழ்வியல் பதிவுகள்

**முனைவர் பா. ம. ஜெயகலா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

தெ.தி.இந்துக்கல்லூரி, தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**

**DOI: 10.5281/zenodo.5534049**

**ஆய்வுச்சுருக்கம்**

'பால்மரக்காட்டினிலே' என்பது அகிலனால் படைக்கப்பட்ட ஒரு சமூகநாவலாகும். மலேசியாவில் வெள்ளைக்காரர்களுக்கு சொந்தமான விக்டரி எஸ்டேட்ரப்பர் மரக்காடு தான் கதை நிகழும் இடமாகும். இங்கு கங்காணிகளால் தமிழ்நாடு, கேரளா, இலங்கை போன்ற இடங்களிலிருந்து ஏமாற்றி கொண்டுவரப்பட்ட மக்கள் கொத்தடிமைகளாகப் பெரும் துன்பங்களை அனுபவித்துள்ளனர். இங்கு வாழும் பெரும்பாலான மக்கள் ரப்பர் தோட்டங்களிலும், வெளிக்காட்டிலும் வேலை செய்துள்ளனர். ரப்பர் மரக்காட்டில் வாழும் தொழிலாளர்களின் வீட்டை 'லயன்கள்' என்பர். மின்சார வசதியில்லாததால் சிம்னிவிளக்கு, அரிக்கன் விளக்குகளைப் பயன்படுத்தியுள்ளனர். இங்கு ஆறாம் வகுப்பு வரை உள்ள தமிழ்வழிக்கல்விச்சாலை உள்ளது. இந்நாவலில் ஒப்பந்தக்கூலிகளாக இங்கு வந்து

 **Isbn Number**: 978-93-91115-54-8

குடியேறியவர்களின் காதலையும் ஆசிரியர் சுட்டியுள்ளார். ஒப்பந்த கூலிகளான ரப்பர் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை இந்நாவல் நமக்கு எடுத்துரைக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** சித்தரிப்பு, ரப்பர் மரக்காடு கூலிகள், வாழ்க்கை, பால்மரக்காட்டினிலே.

**முன்னுரை**

'பால்மரக்காட்டினிலே' என்னும் நாவலானது 1976-இல் கலைமகள் இதழில் மாதந்தோறும் இருபத்துநான்கு அத்தியாயங்களாக வெளிவந்த தொடர்கதை. மலேசியாவில், வெள்ளைக்காரனுக்குச் சொந்தமான விக்டரி எஸ்டேட்டில் தினக்கூலிகளானத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை எடுத்துரைக்கிறது. தினக்கூலித் தொழிலாளர்கள் தமிழ்நாடு, இலங்கை, கேரளா பகுதிகளில் இருந்து ஒப்பந்தக் கூலிகளாகக் கொண்டுவரப்பட்டு கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டனர்.

**நாவல்**

உலகின் சிறந்த இலக்கிய வடிவமாக நாவல் விளக்குகிறது. தொடக்க காலத்தில் தமிழில் இதனை மொழிப்பெயர்த்து 'நாவல்' என அழைத்தனர். தற்போது 'புதினம்' என்று அழைக்கிறோம்.

 **Isbn Number**: 978-93-91115-54-8

**“நாவல் மனித உணர்வுகள், எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றை விளக்கிக் காட்டும் உரைநடையில் அமைந்த நீண்டகதை என வெப்ஸ்டேர்ஸ் அகராதி விளக்கம் தரும். நாவல் என்பது உரைநடையில் புதிய முறையில் சொல்லப்படும் நீண்ட கதை. இந்த இலக்கிய வடிவத்திற்கு உள்ள நெகிழ்ச்சித்தன்மை எந்த இலக்கிய வகை எனபதொன்றே வரையறுக்க முடிந்ததாகும் என்பார் இரா. தண்டாயுதம். நாவல் என்பது நிலைத்து நிற்கக் கூடிய ஒருகதை. வரலாற்று உண்மை அல்ல. ஆனால் வரலாற்று உண்மையாக இருக்ககூடும்.” (எஸ். ஸ்ரீகுமார் : 433, 434).**

நாவலுக்கு உள்ள ஆற்றலும் செல்வாக்கும் மிகுதி. மக்கள் பெரும்பாலோர் படித்து உணரக் கூடிய இலக்கியமாக இருப்பதால், அது சமுதாயத்தின் போக்கையே திருத்த வல்லதாகவும் மாற்றியமைக்கக் கூடியதாகவும் உள்ளது. இங்கிலாந்தில் சமுதாய வாழ்க்கையை மாற்றி அமைத்தலில் டிக்கன்ஸ் முதலானவர்கள் இயற்றிய நாவல்களுக்குப் பெரும் பங்கு உண்டு என்பர். அந்நாட்டு ஆராய்ச்சியாளர், அவ்வாறே டாஸ்ட்டாவெஸ்கி, செக்கோ, டால்ஸ்டாய் முதலானவர்களின் கற்பனைகள் ரஷ்ய நாட்டின் மாறுதலுக்குப் பெரிய காரணம் என்பர்.

 Isbn Number: 978-93-91115-54-8

பிரெஞ்சு, இத்தாலி முதலான நாட்டு வரலாறுகளை ஆராய்நதவர்களும் அவ்வாறே நாவல்களின் செல்வாக்கை மதிப்பிடுவர் (மு. வரதராசன் : 115). மனித சமுதாயத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கருவாகக் கொண்டு கற்பனைகள் கலந்து நாவல் படைக்கப்படுகிறது.

**அகிலன்**

'பால்மரக்காட்டினிலே' நாவலின் ஆசிரியர் அகிலன் என்று அழைக்கப்படும் அகிலாண்டம், பள்ளிப் பருவத்தில் 'சக்தி வாலிபர் சங்கம்'என்ற அமைப்பை உருவாக்கி, கள்ளுக்கடை மறியல், அந்நியத்துணி புறக்கணிப்பு போன்ற போராட்டங்களில் ஈடுபட்டார். முதன் முதலில் இவர் 1938-இல் 'அவன் ஏழை'என்ற கதையைப் பள்ளியின் காலாண்டு சஞ்சிகைக்காக எழுதினார். இவருடைய மொழிநடையைப் பார்த்து ஆசிரியரே ஆச்சரியப்பட்டுள்ளார். இவர் 18 நாவல்கள், 16 சிறுகதை தொகுப்புகள், 6 கட்டுரை தொகுப்புகள், 2 சிறுவர் நூல்கள், 1 நாடகம், 3 மொழிபெயர்ப்பு நூல்கள் படைத்துள்ளார்.

**தெய்வம்**

இயற்கையின் அச்சமூட்டும் நிகழ்வுகள் யாவும் மனிதனைக் இறைவழிபாட்டிற்கு கொண்டு சென்றதாக மானிடவியலாளர்கள் கருதுகின்றனர். தெய்வ வழிபாடு


Isbn Number: 978-93-91115-54-8

என்பது நம் வாழ்வியலோடு பின்னிபிணைந்துள்ளது. தங்கள் வாழ்வியல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தெய்வங்களை வழிபடுகிறோம். விக்டரி எஸ்டேட் ரப்பர் தோட்டத்தின் வெளியே மேட்டுப்பாதையில் தோட்டத்துக்குத்தோட்டம் மாரியம்மன், முனியாண்டி கோவில்கள் உள்ளன. ரப்பர் தோட்டத்தில் நடைப்பெறும் பெரும்பாலான திருமணங்கள் மாரியம்மன் கோவிலில் தான் நடைப்பெறும். இக்கோவில் சின்னஞ்சிறு கோவில். கோபுரத்தின் கீழ் கருவறை அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் எதிரே நீண்ட கூடமும் வாயில் முகப்பும் காணப்படுகின்றன. இக்கேயிலில், பாலனும் கண்ணமாவும் தங்கள் திருமணம் எந்தவிதத் தடங்கலுமின்றி நடைபெற வேண்டிக்கொள்கின்றனர்.

**வீட்டின் அமைப்பு**

நாம் உயிர் வாழ உணவு, உடை, உறைவிடம் மிகவும் இன்றியமையாதன. நாம் இன்று நம்முடைய பொருளாதார வசதிக்கேற்ப வீட்டினை அமைத்து வாழ்ந்துக் கொண்டு இருகின்றோம். இந்நாவலில் தினக்கூலி மக்களின் குடியிருப்புகளை ‘லயன்கள்’ என்கின்றனர். பாங்கோர்த் தீவுக்கு எதிரில் இருந்த கடற்கரையில் மீனவர்கள் தங்கள் இருப்பிடத்தை அமைந்திருந்தனர். பரண் அமைப்பில் வீடுகட்டப் பட்டிருந்தது. தரையில் வீடு அமைத்தால் மழைநீர் மற்றும்

காட்டு மிருகங்களால் துன்பம் நேரிடும் என எண்ணி பலகைகளால் பரண் அமைத்து வீடுகள் கட்டபட்டிருந்தன. ஏணிபடிகள் மூலம் தான் வீட்டிற்குள் செல்ல முடியும். இவ்வாறு பாதுகாப்பாக அமைந்திருந்தனர்.

**தொழில்**

ஒருவர் செய்யும் தொழிலானது அவரின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கிறது. தொழில்தான் ஆண்களுக்கு உயிர் என்பதை ‘வினையே ஆடவர்க்கு உயிரே’ (குறுந் : 135) என குறுந்தொகை சுட்டுகிறது. மனிதவாழ்க்கைக்குப் பொருளாதாரம் மிகவும் அவசியம். இந்நாவலில் தமிழ்நாடு, கேரளா, மற்றும் இலங்கைகளிலிருந்து கொத்தடிமைகளாகக் கொண்டு வரப்பட்ட மக்கள் பெரும்பாலானவர்கள் ரப்பர்தோட்டத்திலும், வெளிக்காட்டிலும் வேலைச் செய்தனர். சிலர் ஆசிரியராகவும், கிராணிகளாகவும் இருந்தனர். வேலைக்குச் செல்பவர்கள் 5.30 மணிக்கு வீட்டிலிருந்து செல்ல வேண்டும். இன்று நாம் வேலைபார்க்கும் அலுவலகத்தில் சென்றவுடன் வருகையைப் பதிவுச் செய்வது போல அன்றும் வருகையை மாஸ்டர் களத்துக்குச் சென்றுப் பதிவுச் செய்துள்ளனர். அதன் பிறகே அவரவருக்கு ஒதுக்கபட்ட இடங்களில் சென்று தங்கள் வேலையைத்


**Isbn Number**: 978-93-91115-54-8

தொடங்கவேண்டும். ரப்பர் மரத்தை கீறி அதிலிருந்து வரும் பாலைச் சேகரித்துக் கொள்வார்கள். வெளிக்காட்டு வேலைக்குச் செல்பவர்கள் புதர்களை வெட்டியும் காடாய் மண்டும் லாலான்புல் போன்வற்றை அழிப்பதற்கு மருந்து தெளிப்பதும் அவர்களது வேலையாக இருந்தது.

**பால்சேகரித்தல்**

ஆறுமணிக்கெல்லாம் மரக்காட்டில் வந்து விடுவார்கள் அவரவருக்கு ஒதுக்கபட்ட மரங்களை நாடிச்சென்று,

> **கீறப்பட்ட பகுதிகளின் பட்டைகளைச் சீவிக் கிண்ணங்களில் பால் வடியச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மரமாக இப்படி முதலில் சீவி விட்டுக் கொண்டே வரவேண்டும். இதற்குள் காலை பத்து பத்தரை மணியாகிவிடும். பிறகு அங்கேயே மரக்காட்டில் காலை ஆகாரம் நடக்கும். சாப்பிட்டவுடன் மீண்டும் பாலைச் சேகரிக்க வேண்டும். கிண்ணத்துப் பால் சிறு வாளிக்கு வந்த பின்னர் பெரிய வாளிக்கு மாற்றப்படும். அங்கிருந்து அதைக் கொண்டு போய் நிறுத்துக்கணக்குக் கொடுப்பார்கள். அளவுக்குத் தக்கபடி நாள்தோறும் கூலி பதிவாகும். தினக்கூலி தான் மாதச்சம்பளம் இல்லை. (அகிலன்: 15)**


**Isbn Number**: 978-93-91115-54-8

பாலை அளவீடு செய்வதில் பல ஏமாற்று வேலைகளைக் கையாளுவார்கள். தொழிலாளர்கள் இதனை கேட்பதில்லை. கேட்டால் தண்டனை தான் கிடைக்கும் நியாயம் கிடைப்பதில்

**தொழிற்கருவிகள்**

நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலுக்கும் அதற்கான கருவிகளைப் பயன்படுத்துகின்றோம். கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் எளிதாக தொழிலை வெகு விரைவில் செய்ய முடிகின்றது. இவ்வாறு தொழிலுக்காகப் பயன்படுத்தும் கருவிகளை தொழிற்கருவிகள் என்கின்றோம். ரப்பர் தோட்டத்தில் வேலைச் செய்பவர்கள் பால்வெட்டும் கத்தி, உலர்ந்த ரப்பரைச் சேகரிக்கும் மூங்கிற்குடவை, பால் சேகரிக்கும் வாளி போன்றவைகளைப் பயன்படுத்தி தங்கள் தொழில்களைச் செய்துள்ளனர்.

**கிராணிகள் வாழ்க்கை நிலை**

கிராணிகள் என்பவர் வேலைச் செய்பவர்களைக் கண்காணிப்பவர்களாக இருந்தனர். கிராணிகளில் தலைமைக்கிராணி. பெரியகிராணி, சிறிய கிராணி, பால் நிறுக்கும் கிராணி, மாஸ்டர் கிராணி எனப் பலவகையினர் உண்டு. கிராணிகள்,

**இலங்கைத் தமிழர்கள், கேரளத்திலிருந்து வந்தவர்கள், தமிழ்நாட்டிலிருந்து வந்தவர்கள்**

 **Isbn Number**: 978-93-91115-54-8

**ஆகியோர் கலந்திருந்தார்கள். ஓரளவு கல்வி அறிவுப் படைத்தவர்கள். இவர்கள்; பால்மரக்காட்டில் நடைபெறும் பல்வேறு வேலைகளையும் மேற்பார்வைச் செய்தார்கள். மரத்திலிருந்து வடியும் பால் ரப்பர் தகடுகளாக வெளியேறும் வரை களத்து வேலைகள் இவர்கள் கண்ணகாணிப்பில் நடைபெறும்" (அகிலன்: 151)**.

நடுத்தரவர்க் கத்தினரைப் போன்று வாழ்க்கை வசதியுடன் வாழ்ந்து வந்தார்கள். கார்கள், மோட்டார்சைக்கிள், ஸ்கூட்டர் முதலிய வாகனங்களைப் பயன்படுத்துவோரும் உண்டு. இவர்களுடைய வாழ்க்கையானது, மேல்நிலையில் இருக்கும் வெள்ளைத்துரையோடும் ஒட்டமுடிவதில்லை, கீழ் நிலையில் இருக்கும் தொழிலாளர் களோடும் ஒட்ட விரும்புவதில்லை.

**கங்காணிகள்**

தொழிலாளர்களை அடக்கி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்தவர்கள் கங்காணிகள். பதினாறு பேர் கொண்ட காங்கிற்கு பொறுப்பு ஒரு கங்காணி. கங்காணியின் தலைமை கிராணி ஆவார். கங்காணிகள் கணக்குகளை கிராணிகளிடம் ஒப்படைக்க வேண்டும். கங்காணிகள் தோட்ட வேலைக்கு ஆட்களைக் கொண்டு சேர்ப்பார்கள். உடல் நலக்குறைவால் வேலைக்கு வராதவர்களின் இடத்துக்கு அங்கு நின்று கொண்டிருந்த


**Isbn Number**: 978-93-91115-54-8

பதில் ஆட்களை அனுப்பிவைப்பார்கள். இத்தகைய வாழ்க்கையை கங்காணிகள் வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள்.

**ஆசிரியர்பணி**

“எழுத்தறிவித்தவன் இறைவன்” கல்வியினை கற்றுத் தருகின்றவர்கள் மரியாதைக்குரியவர்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். இதில் தாய் தந்தைக்கு அடுத்த நிலையில் இருப்பவர்கள் ஆசிரியர்கள். இவர்கள் வாழ்க்கையில் கல்வி ஞானத்தைக் கொடுப்பவர்கள். பாலன் தோட்டத்தில் தமிழ்ப் பள்ளிக் கூடத்தின் ஆசிரியர் தலைமை ஆசிரியர் சண்முகம் ஆவார். பாலன் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் நன்றாக கல்வி கற்று முன்னுக்கு வர வேண்டும் என எண்ணி பல முயற்சிகளை மேற்கொண்டவன். சிறுவர்களின் உயர் கல்விக்காகப் போராடியவன். புனிதமான ஆசிரியர் பணியினை நேர்மையாக செய்தவன்.

**தேநீர் அருந்துதல்**

காலையில் எழுந்ததும் கரித்தூளைப் பயன்படுத்தி பல்லைவிளக்கிக் கொள்வார்கள். பின்பு எல்லோரும் அலுமினியத் தம்ளர்களில் தேநீர் பருகுவார்கள். தேநீர் அருந்துதல் அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. தேநீர் அருந்தியதும் வேலைக்குச் செல்வார்கள். இதன் மூலம் தேநீர் அருந்தும் பழக்கம் அவர்கள்


**Isbn Number**: 978-93-91115-54-8

வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துள்ளதை அறிய முடிகின்றது. வீரப்பன் வேலம்மாள் தம்பதியரின் எட்டாவது குழந்தையான ராஜாவுக்கு வெந்நீரில் பால் தூளையும், சர்க்கரையும் கலந்துக் கொடுத்தனர். இன்றும் பெரும்பாலானோர் காலையில் எழுந்ததும் தேநீர் பருகுவதும் குழந்தைகளுக்கு பால் பவுடரைக் கலந்துக்கொடுப்பதும் வழக்கத்தில் இருக்கின்றன.

**உணவு**

ஒருவர் உயிர் வாழ உணவு மிகவும் இன்றியமையாதது. “பசி என்பது ஓர் உயிரியல் நிகழ்வு. இது ஓரணு உயிரியான அமீபா முதல் படிமவளர்ச்சியின் உச்ச நிலையில் இருக்கும் மனிதன் வரை அனைத்து உயிரினங்களிலும் நிகழ்கிறது. உயிரினங்கள் உடல் ஆதாரங்களைச் செலவிட்டு இயங்குகையில் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் அவ்வாதாரங்களின் இருப்பு நிலை மிகவும் குறையும்போது அது பசி என்னும் உணர்வாக வெளிப்படுகிறது.

உண்மையில் பசி என்பது உடலியல் இயக்கத்தின்போது அடிப்படை எரிபொருள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழ் குறைவதைச் சுட்டிக்காட்டும் ஓர் உயிரியல் அளவு மானியாகும். இந்த இயற்கை நிகழ்வு ஏற்படும் போது ஒவ்வோர் உயிரினமும் அதற்கு ஏற்ற எரிபொருளை (உணவு) உட்கொள்ள வேண்டியிருக்கிறது

 **Isbn Number**: 978-93-91115-54-8

(பக்தவத்சல பாரதி:461). பால் மரகாட்டினிலே நாவலில் தோட்ட தொழிலாளர்கள் சுடுசோற்றில் குழம்பை விட்டுக் கிளறி அலுமினிய டிபன் பாத்திரங்களில் வைத்துக் கொண்டு செல்வதை ஆசிரியர் சுட்டியுள்ளார். இவர்கள் பலவகையான கூட்டு, பொரியல், குழம்பு என உண்ண வசதியற்றவர்கள். ஆனால் வசதியான வாழ்க்கை வாழும் முருகன், ராதா, பாலனின் நண்பன் அஜுஸ் இவர்களைப் போன்றவர்கள் விதவிதமான உணவு உண்பதை நாம இந் நாவலின் வழி அறிய முடிகின்றது.

**கல்வி**

கல்வி ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும். இக்கல்வியானது ஒருவரின் அறியாமையை அகற்றுகிறது. தனிமனித ஒழுக்கத்தை இக்கல்வியானது வளர்க்கிறது. வாழ்வில் முன்னேறவும், அரோக்கியத்தைப் பேணவும் இக்கல்வியானது மிகவும் துணைப்புரிகிறது. கற்றவரே கண் உடையவர். கல்லாதவர்கள் முகத்தில் இரண்டு புண் உடையவர் என்பதை,

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர் (குறள்: 393)**

இக்குறள் சுட்டுகின்றது. ரப்பர் தோட்டத்து பள்ளிக் கூடத்தில் ஆறாம் வகுப்பு வரை உள்ளது. தலைமை ஆசிரியராக சண்முகம் உள்ளார். அந்த பள்ளிக்கூடத்தில்

 Isbn Number: 978-93-91115-54-8

தான் பாலன் ஆசிரியராக வேலைப்பார்கிறான். தமிழ்வழி கல்வி அங்கு நடத்தப்படுகிறது.

> **ஐநூறு குழந்தைக்கு மேல் சேர்ந்திருந்தார்கள். ஆனால், குழந்தைகளில் கால்வாசிப் பேருக்கு மேல் முறையாகப் பள்ளிக்கு வருவதில்லை. சிலர் பாதியிலேயே நின்று விடுவார்கள். பெற்றோருக்குத் துணையாகப் பால் கிண்ணம் துடைப்பது, மரப்பட்டையில் உலர்ந்திருக்கும் ரப்பர்த் துணுக்கைச் சேகரிப்பது, வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது முதலிய வேலைகளைச் செய்வதற்காகப் பெற்றோர் சிலர் தாங்களாகவே குழந்தைகளை நிறுத்திக் கொள்வதுண்டு. வேறு சில வயது வந்த பிள்ளைகளோ பள்ளிக்குச் செல்வதாகப் போக்குக் காட்டிவிட்டு வேறு எங்காவது சுற்றித் திரிவார்கள் (அகிலன்:144-145).**

இவ்வாறு தான் ரப்பர் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி நிலை இருந்தது. ஒரு சில குழந்தைகள் மேற்படிப்புக்காக சிரம்பானுக்குச் செல்கின்றனர்.

தமிழ் வழி படித்த சிறுவர்களுக்கு ஆறாம் வகுப்பிற்கு பிறகு ஆங்கிலப்பள்ளியில் சேர்ந்தால் ஒன்றுமே புரியாமல் கண்ணைக் கட்டி காட்டிலே விட்டது போல் இருந்தது. இந்தப் பள்ளியில் நன்றாகப்

 **Isbn Number**: 978-93-91115-54-8

படித்தவர்களுக்கும் ஆங்கில கல்வியால் மிகவும் துன்ப மடைந்தார்கள். இதனால் பலர் படிப்பை தொடரமுடியாமல் விட்டு விட்டனர். சிறுவர்களின் எதிகாலத்தை எண்ணி பாலன் ஐந்தாம், ஆறாம் வகுப்பு சிறுவர்களுக்கு வகுப்பு நேரம் முடிந்தவுடன் ஒரு மணி நேரம் ஒதுக்கி பாடம் சொல்லி கொடுக்க எண்ணினான். இந்த நல்ல செயலுக்கு தலைமை ஆசிரியர் சண்முகம் தயாராக இருந்தார். பாலன் பெற்றோர் சங்கம் அமைத்து கல்வியின் இன்றியமையாமையைப் பெற்றோர்களுக்கும் புரிய வைக்க வேண்டும் என்றான். உடனே தலைமை ஆசிரியர்,

> **இதெல்லாம் தோட்டப் பள்ளி நிர்வாகத் தலைவருடைய கவனத்துக்கு முதலிலே நாம கொண்டு போகணும். அவர் தடை சொல்றதுக்கு இதிலே ஒண்ணும் இல்லே, நிர்வாகக் குழுவிலே நாணும் ஓர் உறுப்பினன் தான். பெரிய கிராணி தான் இதுக்கெல்லாம் தலைவர். அவர்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் பிறகு நாம வேலையைத் தொடங்கலாம் (அகிலன்:150)**

என்றார். பாலனும் கேட்டு செய்வது தான் முறை என்றான். ஆனால் நிர்வாக அனுமதிக் கொடுக்கவில்லை. ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வியில் மிகவும் பின்தங்கியே இருந்தனர்.


**Isbn Number**: 978-93-91115-54-8

**உடை**

மனித தேவைகளுள் ஒன்று உடையாகும். கண்ணம்மா, “மேலே வண்ணச் சட்டையையும் இடுப்பில் கைலி போன்ற சாரங் ஆடையையும்,அவள் உடுத்திக் கொண்டு இருந்தாள். நாட்டுப்புறத்துக் கேரளத்துப் பெண்ணை யொத்த தோற்றம்” (அகிலன்:19) என ஆசிரியர் இந்நாவலில் சுட்டியுள்ளார். இதன் மூலம் பெண்களின் ஆடைமுறையினை அறிந்துக்கொள்ள முடிகிறது.

**பொழுதுப்போக்கு**

மக்களின் வாழ்க்கை முறையில் ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் மகிழ்ச்சியாகப் பொழுதைக்களிப்பது மிக அவசியமாகும். இன்று நாம் தொலைக்காட்சி, திரைப்படம், விளையாட்டு, சுற்றுலா தலங்கள் என பலவகைகளில் மனதிற்கு சிறிது நேரம் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றோம். இச்செயல் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

ஒப்பந்த கூலிகளாக இங்கு வந்து எல்லா நாட்களும் கொத்தடிமைகளாக வேலைச் செய்யும் இவர்களின் பொழுதுப்போக்கு மாதத்திற்கு இருமுறை திரைப்படம் பார்ப்பதாகும்.

**மாலை தமிழ்த் திரைப்படம் ஒன்று காட்டப்படுவதாக இருந்ததால் முன்னதாகவே**

 **Isbn Number**: 978-93-91115-54-8

> **தோட்டத்துப் பொட்டலை நோக்கி மக்கள் கூட்டம் வந்து இடம் பிடித்த வண்ணம் இருந்தது. மாதம் இரண்டு முறை அங்கே திரைப்படங்களை வரவழைத்துப் போட்டுக் காட்டுவார்கள். அது தவிர, எப்போதாவது அக்கம்பக்கத்து நகரங்களில் தமிழ்ப் படங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக் காட்சிகளாக ஓடுவதுண்டு. பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களுக்குத் தமிழ்த் திரைப்படம் ஒரு முக்கியமான பொழுதுப்போக்கு (அகிலன்:152) ஆகும்.**

பெண்கள் சிலர் பிற்பகலில் தாயக்கட்டமோ, பல்லாங்குழியோ விளையாடுவார்கள். உழைத்து உருக்குலையும் மக்களுக்கு இப்பொழுதுப் போக்கால் மனம் சிறிது மகிழ்ச்சியடையும். பெரும்பாலோருக்கு இதற்கெல்லாம் நேரம் கிடைப்பதில்லை. ரப்பர் காட்டில் வேலையை முடித்து வந்தால் இரவு தூங்கப்போகும் வரை வீட்டில் வேலை இருக்கும்.

**புழங்குப்பொருட்கள்**

புழங்குப்பொருள் என்பது மக்கள் நாள்தோறும் பயன்படுத்திய பொருட்களாகும். இப்பொருட்கள் அவர்களின் பண்பாட்டை அடையாளப்படுத்துகின்றன. ரப்பர்தோட்டத்தில் வேலைச் செய்யும் ஒப்பந்தக் கூலிகளின் வாழ்க்கையோடு அலுமினியப் பாத்திரங்கள்,

 **Isbn Number**: 978-93-91115-54-8

அரிக்கன் விளக்கு, சிம்னிவிளக்கு, விறகு அடுப்பு, பால்வெட்டும் கத்தி, மூங்கிற் குடவை, வாளி, பெஞ்சு, தகரத்தொட்டி, கரித்தூள், என்பனஇரண்டறக் கலந்துள்ளன. அலுமினியப் பாத்திரங்களைச் சமைப்பதற்கும், உணவு உண்பதற்கும், தண்ணீர் குடிப்பதற்கும், உணவுகளை வேலைச் செல்லும் போது எடுத்துச் செல்லவும் பயன்படுத்தியுள்ளனர்.

மின்சாரவசதி இல்லாததால், சிம்மினி மற்றும் அரிக்கன் விளக்குகளைப் பயன்படுத்தியுள்ளனர். விறகு அடுப்பினைப் பயன்படுத்தி சமைத்துள்ளனர். பால் வெட்டுவதற்கு கென்று கத்தி, உலர்ந்த ரப்பர் பாலை சேகரிக்க மூங்கிற் குடவை, பாலினை ஊற்ற பெரிய வாளி என இவைகளை தொழில் செய்ய பயன்படுத்தியுள்ளனர். தகரத் தொட்டிகளில் தண்ணீரைச் சேகரித்துப் பயன்படுத்தியுள்ளனர்.

**காதல்**

இரு மனங்களில் சங்கமமான காதல் ஆரம்பகாலம் முதல் தற்காலம் வரை நம் சமூகத்தில் மக்களின் வாழ்க்கையோடு பின்னிபிணைந்துள்ளது. பலரின் காதல் கைகூடுகிறது சிலரின் காதல் கைகூடுவதில்லை. இக்காதல் ரப்பர் மரக்காட்டிலும் சங்கமித்தது. பாலன், கண்ணம்மா இவர்களின் திருமணத்தை சிறுவதிலேயே பெற்றோர்கள் முடிவுசெய்தனர். பாலனின் தாய்மாமன்


Isbn Number: 978-93-91115-54-8

மகள் கண்ணம்மா. இருவரும் வளர வளர இவர்களுடன் காதலும் வளர்ந்தது. தொழிற்சங்கத்தின் கட்டுப்பட்டால் இவர்களால் திருமணம் செய்து வாழ முடியவில்லை.

பாலனின் நண்பனான கணேசனும், சின்னசாமியின் தங்கையான செல்லமும் காதலித்தனர். இவர்களின் காதலுக்கு சின்னசாமியும் அவனது மனைவியான முனியம்மாளும் எதிர்ப்புத் தெரிவித்தனர். சின்னசாமி ஒரு குடிகாரன் செல்லத்தை திருமணம் செய்து கொடுக்க விரும்பவில்லை மேலும் முனியம்மா வீட்டுவேலைகளைச் செய்யவும், தன் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும் இவளை தன் வீட்டிலேயே வைத்திருக்க விரும்பினாள். பலத்துன்பங்களை அனுபவித்த பின்பு பாலனின் முயற்சியால் கணேசன், செல்லத்தை திருமணம் செய்து கொண்டாள்.

வீரப்பனின் மூத்த மகனான முருகன் கோலாலம்பூரில் ஆங்கிலப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தான். சிறுவதில் முருகனுக்கும், முருகனின் தாய்மாமன் மகளான காமாட்சிக்கும் திருமணம் எனப் பெற்றோர்கள் முடிவு செய்துவைத்திருந்தனர். ஆனால் முருகன் தான் வேலைப் பார்க்கும் கோலாலம்பூரில் வசதியானப் பெண்ணான ராதாவை காதலித்து திருமணமும் செய்துக் கொண்டான். ரப்பர் தோட்டத் தொழிலாளிகளின் வாழ்க்கையில்


**Isbn Number**: 978-93-91115-54-8

சிறகடித்த காதலை ஆசிரியர் நம் கண்முன் கொண்டு வந்துள்ளார்.

**திருமணம்**

திருமணம் ஒரு சமூக சட்ட உறவுமுறை அமைப்பாகும். ஆணும் பெண்ணும் இணைந்து இல்லறம் நடத்த மேற்கொள்ளும் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகும். திருமணம் மனித சமுதாய நலனுக்காக வரையறுக்கப்பட்ட ஒரு ஒழுங்கு முறையாகும். திருமணத்திற்கு மகத்துவம் தாலி கட்டுவது இப்பழக்கம் தொன்று தொட்டு இருந்தே வழக்கத்தில் இருக்கும் சடங்குமுறையாகும். களவு வெளிப்பட்ட பின் பலர் அறிய திருமணம் நடத்தும் வழக்கம் தோன்றியதை தொல்காப்பியம்,

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப (தொல். கற்: 143)**

இந்நூற்பா வழி விளக்குகிறது. ரப்பர் தோட்டத்து திருமணம் பெரும்பாலும் மாரியம்மன் கோவிலில் நடைப்பெறும். பாலன், கண்ணம்மா திருமணத்தை நிர்வாகம் தடுத்ததால் கண்ணம்மா மனதளவில் மிகவும் பாதிப்படைந்து விட்டாள். கண்ணம்மாவிற்கு உடம்பு சரியில்லாத காரணத்தால் அன்று வேலைக்குச் செல்லவில்லை. அவளைப் பார்க்க வந்த பாலனிடம்,


**Isbn Number**: 978-93-91115-54-8

**இப்பவே, இந்த நிமிஷத்திலேயே, நமக்கு கல்யாணம் நடக்கணும்னு தான் ஆசைப்படறேன். நாளைக்குப் பொழுது விடிஞ்சா எங்கே என்ன நடக்குமோ தெரியாது. நீங்க சொன்ன மாதிரி புதுப் பெண்ணா நான் உங்களுக்குக் கழுத்தை நீட்டக் காத்திருக்கிறேன். இப்பவே இந்த இடத்தலேயே நீங்க எனக்குத் தாலி கட்டலாம் (அகிலன்:96)**

என்றாள். கண்ணம்மா வெற்றிலை, பாக்கு, பூ, மஞ்சள் மற்றும் மஞ்சள் துண்டு கட்டப்பட்ட மஞ்சள் கயிறு என்பன வைக்கப்பட்ட தட்டை பாலனின் முன்னால் கொண்டு வந்தாள். பாலன் என்ன பேசவேண்டும் என்பது அறியாமல் நின்றான். அவளுடையபிடிவாதம் அவனைத் திணறச் செய்தது. அவள் மனதளவில் பாதிப்படைந்ததைப் புரிந்து கொண்ட பாலன், தோட்டத்தில் குடியிருக்கும் மாரியம்மனை நினைத்துப் பிரார்த்தனை செய்த பின்பு கண்ணம்மாவின் கழுத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டினான். இவ்வாறாக திருமணத்தில் வெற்றிலை, பூ, மஞ்சளின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது.

**ஆயாக்கொட்டகை**

இன்று வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை காலையில் குழந்தைகள் நர்சரியில்விட்டு விட்டு வேலைமுடிந்த பின்பு குழந்தைகளை வீட்டிற்கு

 **Isbn Number**: 978-93-91115-54-8

அழைத்து வருவார்கள். அது போல ரப்பர் தோட்டத்தில் வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பச்சிளம் குழந்தைகளை கவனிக்க ஆயாக்கொட்டகையில் விடுவர்.

> **நீண்ட சதுரமான கொட்டகை, ஆயாக் கொட்டகை மேலே தகரம் வேய்ந்திருந்தார்கள். சுற்றிலும் மூன்றடி உயரத்துக்குப் பலகையால் சுவர் போல் அடைந்திருந்தார்கள். கொட்டகைக்குள் சில துணித் தொட்டில்கள் தொங்கின. குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள இரு ஆயாக்கள் இருந்தனர். வேலைக்குச் செல்லும் தாய்மார்கள், தங்கள் வேலை நேரத்தில் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கான கூடம் அந்த ஆயாக்கொட்டகை. கைக்குழந்தைகளைத் தவிர மூன்று, நான்கு வயதுச் சிறுவர் சிறுமியரும் கூட அங்கே காணப்பட்டார்கள் (அகிலன்: 14,15).**

இதன் மூலம் ஆயாக் கொட்டகை இருந்ததை அறிந்துக் கொள்ள முடிந்தது.

**வேலை நீக்கம்**

தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தால் தொழிலாளர்கள் தங்கள் சங்கங்கள் வழியாக போராடி உரிமைகளைப் பெறுகின்றனர். இதைப் போல இந்நாவலில் எந்த தவறும் செய்யாமலே பாலனை ஆசிரியர் பணியிலிருந்து நீக்கியதை எதிர்த்து


**Isbn Number**: 978-93-91115-54-8

நிர்வாகத்திடம் முறையிடுவதை காணமுடிகிறது. ஆனால் மீண்டும் பாலனுக்கு ரப்பர் தோட்டத்தில் ஆசிரியர் பணி கொடுக்க மறுத்து விட்டனர். எழுச்சியின் தொடக்கமாகக் சின்ன அளவில் ஒரு தொழிலாளர் போராட்டம் காட்டப்படுகிறது.

**பொருளாதார நிலை**

ரப்பர் தோட்டத்தில் வேலைபார்க்கும் தொழிலாளர்களின் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. வேலைக்கு ஏற்றக் கூலி கிடைப்பதில்லை. ரப்பர் பாலை சரியாக அளந்து ஊதியம் கொடுப்பதில்லை. எதிர்த்து கேட்ட முத்துவிற்கு தண்டனைதான் கிடைத்தது. அவர்களுக்கு போதிய வருமானம் கிடைக்காத காரணத்தால் வறுமையில் வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருந்தனர். மளிகைக்கடை இஸ்மாயில் சின்னசாமிக்கு கடன் கொடுப்பவர். ஐந்நூறு வெள்ளிக்கு இஸ்மாயிலிடம் ஏலச்சீட்டுப் போடுவான் சின்னசாமி, போட்ட சீட்டை இரண்டாவது மாதமே இருநூற்றைம்பது வெள்ளிக்கு ஏலம் எடுப்பான். இஸ்மாயில் கடையில் மளிகைச்சாமான் வாங்கிய கடனுக்காக நூற்றைம்பதோ, நூறோ வரவு வைத்துக்கொண்டு மீதமுள்ளதை சின்னசாமியிடம் கொடுப்பான். இந்த பணத்தை வீட்டுச் செலவுகளுக்கு கொடுக்க மாட்டான். கள்ளுத்தண்ணி, சம்சுத்தண்ணி,

சிரம்பானில் உள்ள சினிமாக் கொட்டகை, ரெஸ்டாரண்டு, என்பனவற்றிற்கு பணம் தண்ணீர் போலப்பாயும். பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்தாலும் பணத்தை தேவையில்லாமல் செலவு செய்துள்ளனர்.

**பழமொழி**

மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி. இதனை மூதுரை, முதுசொல், முதுமொழி, பழஞ்சொல் என பல பெயர்களில் அழைக்கின்றனர். இத்தகைய பழமொழியானது ரப்பர் தொழிலாளர்களின் வாழ்வியலோடு இரண்டற கலந்துள்ளதை இந்நாவல் வழி அறியமுடிகிறது.

> **தமிழ்ப் பள்ளிக்கூடத்திலே ஆறாம் வகுப்புப் படிச்சிட்டுப் பிறகு ஆங்கிலப் பள்ளிக்கும் போகிற குழந்தைகளுக்கு அங்கு ஒண்ணுமே புரியறதில்லை. ‘ரிமோவ்’வகுப்புக்குப் போனா, அங்கே அவங்களுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டாப்பலே இருக்குஇங்கேநல்லா படிச்ச குழந்தைங்க கூட, அங்கே கஷ்டப்படறாங்க (அகிலன்: 148)**

ஒன்றும் புரியவில்லை என்ற கருத்தைச் சொல்ல இப்பழமொழியைப் பயன்படுத்தியுள்ளார்.

துரைச்சிங்கத்திடம் பாலனும், தலைமை ஆசிரியர் சண்முகமும் குழந்தைகளின் கல்விகுறித்து

 **Isbn Number**: 978-93-91115-54-8





பேசிக்கொண்டிருக்கும் போது அங்கு டிரஸ்ஸர் மாதவன் வந்து இவர்களின் முயற்சியை வீண்ணடித்து விட்டான். இதனால் கோபம் கொண்ட தலைமையாசிரியர் வெளியே வந்தவுடன், “வெண்ணை திரண்டு வாற நேரம் பார்த்து இந்த சகுனிப் பயல் மாதவன் குறுக்கே புகுந்துவிட்டான்தாழியை உடைச்சுட்டான்” என்று தனக்குள் முனுமுணுத்துக் கொண்டார். தங்கள் வாழ்வோடு இரண்டற கலந்த பழமொழிகளையும் நாம் நாவலில் காணமுடிகிறது.

**தேனிலவு**

நம் சமுதாயத்தில் திருமணமான புதுமண தம்பதியர் இருவரும் புதிய இடத்திற்கு தேனிலவிற்கு செல்வதை நம்மால் இன்று பார்க்க முடிகிறது. நவாலில புதிதாக திருமணமான முருகன், ராதா இருவரும் பாங்கோர்த்தீவில் தேனிலவிற்குச் சென்றதை இந்நாவலில் ஆசிரியர் சுட்டியுள்ளார். சமுதாய நிகழ்வுகள் படம்பிடித்து காட்டப்பட்டுள்ளன.

**இரண்டாம் உலகப்போர்**

இரண்டாம் உலகப்போர் வரலாற்றுச் செய்தியினை இந்நாவலில் ஆசிரியர் சுட்டியுள்ளார். வீரப்பன் குடும்பத்தார் இங்கு வந்த சிறிது காலத்திலேயே இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. தோட்டத்தின் மேலே ஜப்பானிய விமானங்கள் பறந்து குண்டுகளை


**Isbn Number**: 978-93-91115-54-8

வீசின. தோளில் துப்பாக்கி மாட்டிய ஜப்பானிய ராணுவத்தார் நாலு பக்கங்களிலிருந்தும் தோட்டக்காடுகளுக்குப் புகுந்தார்கள். பல துரைமார்கள் தப்பி ஓடிவிட்டார்கள். ஜப்பானியர் ஆட்சி காலத்தில் ரேசன் அரிசி சரியாக கிடைக்காமலும், மானத்தை மறைக்க சாக்குத்துணியைப் பயன்படுத்தியும் வாழ்ந்து வந்துள்ளனர். தமிழ் நாட்டிலிருந்து வந்த லட்சம் பேருக்கு மேல் அவன் போட்ட சயாம் மரண ரெயில்வேயிலே இறந்து விட்டார்கள். பழனி, ஜப்பான் காரர்களுக்கு எதிரான கொரில்லாப் படையில் சேர்ந்து சிறிது காலம் காட்டுக்குள் மறைந்து வாழ்ந்தான். வீரப்பன் நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்து பர்மாவுக்குப் போய் வந்தான். பால் மரக்காட்டினிலே ஒரு சமூக நாவலாகும். இந்நாவலின் வழி இரண்டாம் உலகப்போர் வரலாற்றுச் செய்திகளையும் அறிந்துக் கொள்ளமுடிந்தது.

**பாலியல் வன்முறை**

வறுமையால் வேலைக்கு செல்லும் பெண்களை சில ஆண்கள் பலாத்காரம் செய்து அப்பெண்களின் வாழ்க்கையை சீரழிப்பதை நாம் நாள்தோறும் ஊடகங்கள் வாயலாக அறிந்துக் கொண்டு தான் இருக்கின்றோம். இத்தகைய வன்முறை விக்டரி எஸ்டேட்டிலும் நடந்தேறியது. சின்னச்சாமியின் தங்கையான செல்லத்திடம் டிரஸ்ஸர் மாதவன் ஆள்நடமாட்டம்

 **Isbn Number**: 978-93-91115-54-8

இல்லாத் வடக்கு மேட்டில் பாலியல் பலாத்காரம் செய்ய முயல்கிறான். முத்து அங்கு வந்து செல்லத்தை அவனிடமிருந்து காப்பாற்றுகிறான். பெண்களின் கற்புக்கு பாதுகாப்பு இல்லாத நிலையை ஆசிரியர் தன் நாவல் வழி சுட்டியுள்ளார்.

**பின்னோக்குஉத்தி**

வேலம்மாள் வேலைபார்க்கும் தோட்டத்தின் பக்கத்து தோட்டத்தில் நோட்டீஸ் கொடுத்ததை அறிந்து வேதனை அடைகிறாள். தன் தம்பியின் வாழ்க்கை இனி என்ன வாகும் என்ற விரக்தியில் தாங்கள் சுப்பன் கங்காணியால் ஏமாற்றப்பட்டடு மலேசியா வந்த துன்பத்தைப் புலம்புகிறாள். இந்த இடத்தில் ஆசிரியர் பின்னோக்கு உத்தியைப் பயன்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**

ஒப்பந்த கூலிகளின் வாழ்க்கை அவலத்தை இந்நாவல் வழி ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். இந்தியாவிலிருந்து சென்ற தமிழர்கள் பல தலைமுறைகளாக மலேசியாவில் வாழ்ந்தாலும் தங்கள் பழக்கவழக்கங்களைப் பின்பற்றி கொண்டு தான் வாழ்ந்துள்ளனர். வீரப்பன் வேலைக்குச் செல்லும் போது திருநீறு பூசிக் கொண்டு செல்வது இறைநம்பிக்கையை நமக்கு எடுத்துரைக்கிறது. திருமணத்தில் மஞ்சள் கயிறும் மஞ்சள்துண்டும் பயன்படுத்தியமை நம் பண்பாட்டை

 **Isbn Number**: 978-93-91115-54-8

பறைசாற்றுகின்றன. தன்னலமற்ற பாலன் எஸ்டேட்டில் வாழும் மக்களுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தான். தர்மத்தை அடிப்படையாக கொண்டு காந்தியின் நெறியில் புரட்சி செய்து கோரிக்கைகளை தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தவன்.

**துணைநூற்பட்டியல்**

[1] அகிலன். *பால்மரக்காட்டினிலே.* தாகம், சென்னை-17, 2017.

[2] இளம்பூரணனார், (உ.ஆ). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சாரதாபதிப்பகம், சென்னை.

[3] கருணாநிதி, மு.(உ.ஆ). *திருக்குறள்.* திருமகள் நிலையம், சென்னை-17, 2001.

[4] சக்திவேல்,சு. *நாட்டுப்புறஇயல்ஆய்வு.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை-08, 2018.

[5] சாமிநாதையர்,(உ.ஆ). *குறுந்தொகை,* கபீர்பதிப்பகம், சென்னை, 1962.

[6] பக்தவத்சலபாரதி. *பண்பாட்டு மானிடவியல்.* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்-01, 2016.

[7] வரதராசன், மு. *இலக்கியமரபு.* சென்னை-08, 1990.

[8] ஸ்ரீகுமார், எஸ். *தமிழ்இலக்கியவரலாறு.* ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை-17, 2014.

 **Isbn Number**: 978-93-91115-54-8